# தமிழரசு

1—10—1977

மலர் : 8 இதழ் : 7

## இந்த இதழில்

| | பக்க எண் |
|---|---|
| அருந்தமிழ்க் கவிஞர்கள் அண்ணலுக்குச் சூட்டிய பாமாலைகள் .. .. | 2 |
| காந்தி அடிகள் பிறந்த நாள் விழா— பேரறிஞர் அண்ணா .. .. | 3 |
| அண்ணல் காந்தியடிகளுக்குத் தமிழகம் அமைத்துள்ள நினைவுச் சின்னங்கள் | 8 |
| காந்தியடிகள் கண்ட கனவு நனவாகிறது! | 9 |
| படமும் செய்தியும்.. .. .. | 18 |
| மதுவைப் பற்றி மகாத்மா .. .. | 27 |
| கிராம சுயராஜ்யம் .. .. .. | 29 |
| அண்ணாவைப் பற்றி எண்மர் .. | 31 |
| தமிழ் நாயகன் .. .. .. | 32 |
| நாத்திகத் தெய்வமே! .. .. | 32 |
| பஞ்சாயத்து ராஜ்யம்.. .. .. | 34 |
| நாடு செழிக்கக் காடு வளர்ப்போம்!.. | 35 |
| வீட்டு விலங்குகளால் காட்டு விலங்குகளுக்கு விளைந்திடும் கேடு ! .. | 41 |
| வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் தமிழகமே முன்னோடி .. .. | 44 |
| கானகம் வளர்ப்போம்! கானுயிர் காப்போம்! .. .. .. | 47 |
| தமிழகத்தில் வனவிலங்கு .. .. | 48 |

# அரிசன நாள் விழா
# ஆளுநர் வேண்டுகோள்!

காந்தியடிகள் பிறந்தநாள் விழா, 1977 அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் முதல் எட்டாம் நாள் வரையிலான ஒருவார காலம், காந்தி மண்டபத்தில் கொண்டாடப்பட இருக்கிறது. காந்தி அடிகளின் உள்ளம் விரும்பிய குறிக்கோள்கள் ஒவ்வொன்றுக்கும் ஒரு நாளாக விழா நாட்கள் ஒதுக்கப் பட்டுக் கொண்டாடப்படும். அதன்படி அக்டோபர் இரண்டாம் நாளன்று அரிசன நாள் கடைப்பிடிக்கப்படும்.

அரிசன மக்களின் பிரச்சினைகளை நாமனைவரும் அறிவோம். பொதுமக்களிடையே இந்த நிலைமையைத் தெரியப் படுத்த செயல்முறை திட்டங்களை நாம் மேற்கொள்ளவேண்டும். அக்டோபர் இரண்டாம் நாளன்று நாம் ஒவ்வொருவரும் அரிசன நண்பர்களை ஒருவேளை உணவு உண்ண நமது இல்லத்திற்கு அழைத்து ஒரு பொருத்தமான முறையில் அரிசன நாளைக் கொண்டாட வேண்டும் என்று எண்ணுகிறேன். தனிப்பட்ட ஒவ்வொருவரும், நிறுவனங்களும் மற்றும் சமூகசேவை நிலையங்களும் அந்த நாளில் அரிசன நண்பர்களை ஒருவேளை உணவுக்கு அழைத்து, அந்த விபரத்தை எனக்குத் தெரிவிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். இத்தகைய ஏற்பாடு உள்ளார்ந்த ஒருமைப்பாட்டை விரைவாக உருவாக்குவதுடன், அரிசன மக்களுக்கும் மற்றைய வகுப்பினருக்குமிடையே ஒரு ஆழ்ந்த நல்லெண்ணத்துக்கு வழிவகுக்கும் என்பது திண்ணம்.

—பிரபுதாஸ் பட்வாரி,
ஆளுநர், தமிழ்நாடு.

# அருந்தமிழ்க் கவிஞர்கள் அண்ணலுக்குச் சூட்டிய பாமாலைகள் !



வாழ்கநீ எம்மான் இந்த
வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர்
பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மாநீ வாழ்க ! வாழ்க !

அடிமைவாழ் வகன்றிந் நாட்டார்
விடுதலை யார்ந்து செல்வம்
குடிமையி லுயர்வு, கல்வி
ஞானமும் கூடி யோங்கிப்
படிமிசைத் தலைமை யெய்தும்
படிக்கொரு சூழ்ச்சி செய்தாய்
முடிவிலாக் கீர்த்தி பெற்றாய்
புவிக்குளே முதன்மை யுற்றாய்

—சுப்பிரமணிய பாரதியார்



காந்தியார் இறந்தார் என்று கழறினார் கலங்கிற் றுள்ளம் !
ஏய்ந்தஇம் முப்பா னாண்டில் எழுந்தஅவ் வுணர்வின் ஊற்றால்
மாந்தரின் வறண்ட நெஞ்ச வயலெல்லாம் விளைச்சல் கண்டோம்!
வீழ்ந்தநாட் டெழுச்சி கண்டோம்! வையகம் வியக்கக் கண்டோம்!

இறந்தனர் காந்தி யாரென் றியம்பினார் எரிந்த துள்ளம் !
சிறந்தனர் எவரும் ஏத்தச் சிறந்தனர் ! நாம்சி றக்கப்
பிறந்தனர் ! வாழார் வாழும் பெருநெறி காணக் காட்டிப்
பறந்தனர் ; இசைமு ழக்கப் பறந்தது வானம் பாடி !

பாவேந்தர் பாரதிதாசன்.



மந்திரங்கள் ஏவாமல் மயங்க வைத்தான்
மாயங்கள் புரியாமல் மலைக்கச் செய்தான்
தந்திரங்கள் இல்லாமல் தலைவன் ஆனான்
தண்டனைகள் பேசாமல் தணியச் செய்தான்
அந்தரங்க ஒற்றரில்லா அரச னானான்
அண்ணலெங்கள் காந்திசெய்த அற்பு தங்கள்
எந்தவொரு சக்தியினால் இயன்ற தென்று
எல்லாரும் கூர்ந்தறிய எண்ண வேண்டும் !

— நாமக்கல் கவிஞர்





# காந்தி அடிகள் பிறந்தநாள் விழா!

—பேரறிஞர் அண்ணா



"இன்று உலக உத்தமர் காந்தி அடிகளின் பிறந்தநாள். நாடெங்கும் இந்நாள், நன்னாளாகக் கொண்டாடப்படுகிறது; அவரவர் தத்தமக்கு விருப்பமான முறையில் காந்தி அடிகளுக்குத் தமது உள்ளன்பினைக் காணிக்கையாக்கி அளிக்கின்றனர். அவருடைய திருவுருவப் படத்திற்கு மாலைகளிட்டும் அவர் புகழ் பற்றிய பாடல்களை இசைத்தும், பஜனை நடாத்தியும், நூற்புத் தொண்டாற்றியும், சேரிகளைத் திருத்தும் பணிபுரிந்தும், இந்நாளைக் கொண்டாடுகின்றனர்.

"அவர் ஓர் தூயவர். நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான்...." என்பாரும்;

"அவர் ஓர் விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர், என்பாரும்;

"அவர் ஓர் வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர், என்பாரும்;

"அவர் ஓர் சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழி வகுத்தவர், என்பாரும்;

"அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார் பல்வேறு வகையினர் உளர். இவர்களில், எவருடைய பார்வையில் முழுகாந்தியடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்து கொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம்,

**"காந்தியடிகள் ஒரு தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர்;**

**அவர் காலத்தின் சின்னம்!**

**ஓர் எழுச்சியின் அடையாளம்!**

**ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்!**

''அரசியல் கண்ணோட்டத்துடன் மட்டும் திருப்தி அடைய விரும்பினால், அவருடைய அறப்போர் மாண்பினை மட்டும் வியந்து பாராட்டுவதுடன் இருந்துவிடத் தோன்றும். ஆனால், அரசியல் துறையிலே மட்டும் அரும் பெரும் வெற்றி பெற்று, மற்றத் துறைகளிலே ஈடுபடாதிருந்தவர் அல்ல. அவர், எல்லாத் துறைகளிலும் தமது முத்திரையைப் பொறித்துச் சென்றவர்; எல்லாத் துறையினரும், **'எமக்காகவே காந்தி அடிகள் வாழ்ந்தார்; எமக்காகவே பணிபுரிந்தார்!'** என்று சொந்தம் கொள்ளத்தக்க முறையிலே அவருடைய வாழ்க்கையும் தொண்டும் அமைந்திருந்தன.

''இன்று, அவருடைய பிறந்தநாள், எல்லாத் துறைகளிலே உள்ளவர்களாலும் கொண்டாடப்படுவதற்கான காரணம் இதுவே. அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல; எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

''ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளில் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே, அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்ற கணக்குப் பார்க்க வேண்டும். ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு, அடிக்கடி கிடைக்காது; ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு, இந்நாட்டுக்கு காந்தி அடிகளின் வடிவத்திலே கிடைத்தது. எனவே தான், இந்நாள், ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த 'நற்காலம்' என்ற முறையிலே சிறப்பும் பெறுகிறது.

''மகான்கள், மாவீரர்கள், ஆகியோரின் பிறந்த நாட்களைக் கொண்டாடும் கவர்ச்சி மிகுந்த நாடு நம் நாடு. புகழ் பாடுவதில், பூஜைகள் நடாத்துவதில், வல்லவர்கள் நாம். ஆனால் யாருக்காகத் திருநாள் நடத்துகிறோமோ, எவருடைய திருநாமத்தை பூஜிக்கிறோமோ, எவருடைய ஆற்றல் பற்றி புகழ்ந்து பேசுகிறோமோ, அவர்கள் காட்டிய நெறியிலே நடக்கின்றோமா என்றால், 'இல்லை' என்ற பதிலையே ஏக்கத்துடன் பெறமுடிகிறது.

''இன்று ராட்டை சுழலுகிறது—நாளை? எத்தனை பேர்?—

''இன்று சேரிகளிலே சென்று சேவை செய்கிறோம்-நாளை?-

''இன்று வகுப்பு ஒற்றுமை பற்றிப் பேசுகிறோம், எழுச்சியுடன்-நாளை?

''இன்று கிராமங்களிலேதான் நாட்டின் இதயம் இருக்கிறது என்று உணர்ந்து பேசுகிறோம்: ஆனால் மறுநாள்?

''இன்று நடத்திடும் திருநாளின் மாண்பு, நாளையும் மறுநாளும், பிறநாட்களிலும் நமது எண்ணத்திலும் செயலிலும் ஒளிவிட வேண்டும். அதற்கே இந்நாள்-அவர் புகழ்பாடி மகிழ்ந்திட மட்டுமல்ல-அவர் வழி நடந்திட, அவர் காண விரும்பியதைக் கண்டிட, அவர் தந்து சென்றதை உருக்குலைக்காதிருந்திட, அவர் ஊட்டிய உணர்ச்சிகளை உயிருள்ளவையாக்கிட!

''மாலையின் மாண்பு, மணத்தில்; விளக்கின் பயன் ஒளி! விழாக்களின் பலன், நமது செயலிலே இழைந்திடும் மாண்பிலே இருக்கிறது.

''அவருடைய பிறந்த நாள் நாமெல்லாம் நற்கருத்தும், சீரிய செயலும், பெற்றிடுவதற்கான வாய்ப்பாக அமைதல் வேண்டும்.

''அதற்கான முறையில் நாம் நடந்து கொள்கின்றோமா என்ற கேள்வியை எழுப்புகிறேன்-நம் முன் உள்ள மிகப் பெரிய கேள்வி அது.

''மகான்களையும், மாவீரர்களையும் கொண்டாடுவதிலே வல்லவர்கள் நாம் என்றேன்; அவர்கள் குறித்த அற்புதங்களை, மகிமைகளை, காதைகளாய், கவிதைகளாய் ஆக்கி மகிழ்வதிலும் நாம் மிக வல்லவர்கள்.

''அவர் கடலை, அடக்கினார்; காற்றை விரட்டினார், கருநாகத்தை மாலையாக அணிந்தார், கந்த மூலமே அவருக்கு உணவு, தொட்டார், பட்டமரம் துளிர்த்தது. பார்த்தார் மலடி தாயானாள்; குருடன் பார்வை பெற்றான்-இப்படிப் பட்ட கதைகளைக் கேட்டுக் கேட்டுச் சொக்கிப் போகிறவர்கள் நிரம்பிய நாடும் நம் நாடு.

''இந்த மகிமைகளையும் அற்புதங்களையும் வியந்து பேசுவது, பிறகு எதற்குப் பயன்படுகிறது? **அவர் மகான், ஆகவே அப்படிச் செய்தார். நாம் சாமான்யர்கள், நம்மால் முடியுமா அவர் செய்ததைச் செய்ய?' என்று** பேசி, நமது செயலற்ற போக்குக்கு ஒரு சமாதானம் தேடிக் கொள்ளவே அது மெத்தவும் பயன்படுகிறது.

''அந்த முறையிலே காந்தி அடிகளின் பிறந்த நாளை நடத்துபவர்களிலே நாம் இருந்து விடக் கூடாது என்பதற்காகவே இதனைக் கூறுகிறேன். அவரை அவதார புருஷர்களிலே ஒருவர், பூஜைக்கு உரியவர், அவர் பிறந்த நாளன்று அவர் பற்றிய மகிமையை, அற்புதத்தைப் பேசுவது போதும் என்று இருந்துவிடாமல், அவர் காண விரும்பிய சமுதாயம், அவர் எடுத்துக் காட்டிய இலட்சியம், அவர் விளக்கிச் சென்ற தூய்மை ஆகியவற்றினை நினைவிலே கொண்டு, அதற்கான முறையிலே பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

***"ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினாரில்லை;***

"ஆனால், ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேசவைத்தார்—உரிமை முழக்க மிடச் செய்தார்:

"படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார்;

'அஞ்சி அஞ்சிச் சாவார்! அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே' என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினாரே பாரதியார், அந்த அச்சத்தைத் துடைத்தார்;

"ஆயுதம் தாங்கியவர் எதிரில்,சாகப் பயப்படாதவரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினார்;

"சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச் செய்தார்; நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினார்;

"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் என்ற உறுதி எழச் செய்தார், போர் முகாம் அமைத்து அல்ல, எளிய குடில் அமைத்து; வெட்டச்சொல்லி அல்ல, வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப் போர்ப் பாதை நடந்திடுக என்றுரைத்து; ஆத்திரம் ஊட்டி அல்ல, அன்பினை ஊட்டி!

"மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்ல, இன்று கதை கூறுவோர். காந்தி அடிகள் நடாத்திய அற்புதத்தை நாம் நமது கண்களால் கண்டோம். அந்த 'அரை ஆடை' மனிதர் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததைவிட, 'அற்புதம்' வேறு என்ன இருக்க முடியும்?

"இவரா இந்தியாவின் தலைவர், என்று எள்ளி நகையாடியவர்கள், அந்த அற்புதம் நடைபெற்ற பிறகு 'இவரன்றோ தலைவர்!' என்று புகழ்ந்தனர். இந்நாட்டுக்கு மட்டுமல்ல அடிமைத்தளை உடைத்திட விரும்பும் எந் நாட்டுக்கும் அவர் காட்டிய அறப்போர் முறை பொருத்தமானது என்று இன்று ஆய்வாளர் பலர் கூறுகின்றனர்.

"இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு ஏலம், கிராம்பு பெறுவதுண்டு, பொன்னும் பொருளும் மிக உண்டு, போக்கறியாதார் நிரம்ப உண்டு, என்ற அளவில், பதினாறும் நூற்றாண்டிலே உலகம் அறிந்திருந்தது. பிறகு படிப்படியாக இந்தியா பிரிட்டிஷ் பிடியிலே சிக்கிவிட்டது. அப்போது, இந்தியா என்றோர் நாடுண்டு, அது ஆங்கிலேயருக்கு நல்ல வேட் டைக்காடு என்று உலகம் இழித்தும் பழித்தும் பேசிக்கொண்டது. விடிவெள்ளி தோன்றுவது போல திலகர் காலத்தில் விடுதலைக்கு முயற்சி செய்யப்பட்டது என்ற போதிலும், காந்தி அடிகள், காங்கிரசுக்குள் புகுந்த பிறகே **'இந்தியா என்றோர் நாடுண்டு, அங்கு விழிப் பும் எழுச்சியும் மிக உண்டு'** என்று உலகம் அறிந்து கொள்ள முடிந்தது.

"காந்தி அடிகளின் புகழொளி மூலமே, உலகம் இந்தியாவைக் கண்டு வந்தது. தன் னலமற்ற, விளைவு பற்றிய கவலை யற்ற போராட்ட மனோபாவத்தை நாட்டிலே காந்தி அடிகளால்தான் உண்டாக்கமுடிந்தது. அதற்கு முன்பெல்லாம் விடுதலை கோரி மனுச் செய் யும் மேதாவிகளிடமே நாடு இருந்தது. அவ ருடைய உருவமோ, உடலமைப்போ, பேச்சோ, நடவடிக்கையோ இராணுவ மனப் பான்மையை ஏற்படுத்தக்கூடிய விதமாக இல்லை. ஆனால் அவரால் இராணுவங்களையும் எதிர்த்து நிற்கக்கூடிய வீர உணர்ச்சியை இலட்சக்கணக்கானவர்களிடத்தில் உண்டாக்க முடிந்தது.

"அவருடைய பொதுப்பணியிலே ஒரு கடுமையான சொல், ஒரு நேர்மையற்ற செயல், ஒரு சுயநலத் திட்டம் இருந்ததில்லை. அவருடைய சேவையினால் ஏற்பட்ட செல் வாக்கு இந்தியாவின் ஒளியையும், ஆசியாவின் புகழையும், நிறத்திமிர் கொண்டு இறுமாந் திருந்த ஐரோப்பிய வல்லரசுகளுக்கும் கிலி உண்டாக்கக்கூடிய அளவுக்குப் பரப்பிற்று.

"அவருடைய மொழியைக் கேட்க வெளி நாட்டு அரசாங்கத் தலைவர்கள் ஓடோடி வந்தனர். அவர் மண்குடிசையிலே தங்கினால், அது மதிப்பளிக்கக்கூடியதென்று மன்னர் மன்னர்கள் எண்ணினர்.

"சுயராஜ்யம்" பெற்றளித்து விட்டால் போதும் என்று அவர் கருதவுமில்லை-கூறவு மில்லை. நாடும் மக்களும் எப்படி இருந்திட வேண்டும் என்பதனை அவர் கூறாமலுமில்லை. 'சுயராஜ்யம்' 'ஓர் இலட்சியத்துக்கு வாய்ப்பு' என்றே அவர் கருதினார்; ஒரு நாட்டுக் காதை யிலே பொன் ஏடு அது. ஆனால் கடைசி ஏடு அல்ல, என்பதை வலியுறுத்தினார்.

"நாடும் மக்களும் எந்த நிலை பெற வேண்டுமோ அதற்கு அடிமைத்தனம் தடை யாக இருக்கிறது. ஆகவே அதை எந்த விலை கொடுத்தேனும் அகற்றியாக வேண்டும் என்றே அவர் கூறினார்.

"அடிமைத்தளை அகற்றப்பட்டது; ஆனால் அவர் எந்த நிலையிலே நாடும் மக்களும் இருந் திடவேண்டும் என்று கருதினாரோ, அந்த நிலையை ஏற்படுத்தி விட்டோமா? இல்லை என்பதைச் சொல்லக் கூச்சப்படத் தேவை இல்லை. ஏற்படுத்தியாக வேண்டும் என்ற உறுதி யைப் பெற்றிட இந்நாள் உணர்ச்சி அளித்திட வேண்டும்.

"அச்சம் அகற்றினார்-ஆங்கில அரசி டம் கொண்டிருந்த அச்சத்தை; ஆனால், அச்சம் பிறதுறைகளிலே இருந்து அகன் றதா? இல்லையே; சமுதாயத்தில் மேலோர், கீழோர், செல்வர், வறியர் எளியோர், வலியோர், இருக்குமட்டும், அச்சம் எங்ஙனம் அகலும்?

"பசி அச்சுறுத்துகிறது! பற்றுக் குறை பயமுட்டுகிறது! குரோத உணர்ச்சி விரட்டுகிறது! அச்சம் அகலவில்லை. அச்சம் அகல வேண்டும்; அறநெறி தழைக்க வேண்டும்; அண்ணலின் பிறந்தநாள் விழா நடாத்திடும் போது, இதற்கான உறுதி பெற்றிட வேண்டும்.

"ஒரு புறம் செல்வம், அதனைச் சூழ வறுமை!

"ஒரு புறம் பளபளப்பான பட்டினங்கள், கோடியிலே வறுமை நெளியும் சேரிப் புறங்கள்.

"ஒரு புறம் தொழிற் கூடங்கள், மற்றொரு புறம் வேலையில்லாதோர் கூட்டம்.

"ஒரு புறம் அறநெறி நிலையங்கள், பிறிதோர் புறம் சுரண்டல்காரர், சூதுமதியினர், பதுக்கல்காரர், கள்ளச் சந்தையினர்!

"இதைக் காண அல்ல, அவர் காலமெல்லாம் உழைத்தது. இந்தக் கேடுகளற்ற ஒரு தூய நாடு காண விரும்பினார்.

"கொலையும், களவும், சூதும் குடியும், நிரம்பிய இடம், நாடு அல்ல, காடு—காடு கூட அல்ல, அங்கு மது விற்பதற்காக ஓர் ஏற்பாடும் இல்லை, கொடுமையை மறைத்திடப் பட்டாடை இல்லை. பாதகத்தைச் செய்தும் தப்பித்துக் கொள்ளப் பணம் எனும் ஆயுதம் இல்லை;

"காந்தி அடிகள் இந்தியாவை, மாண்புமிகு நாடு ஆக்கிட விரும்பினார்— சூதற்ற, சுரண்டலற்ற, வகுப்பு பேதமற்ற, நாடாக ஆக்க விரும்பினார், அவர் பிறந்த நாளைக் கொண்டாடும் நாம் காணும் நாடு எத்தகைய நிலையில் இருக்கிறது.

"வகுப்புக் கலவரம்,

"தீண்டாமைக் கொடுமை,

"வலியோர் சிலர் எளியோர்தமை வதைபுரியும் கொடுமை,

"கவலை ததும்பும் கிராமங்கள்,

"அரசியல் சூதுகள்,

"சமுதாயச் சதிகள்,

எல்லாம் நெளிகின்றன, அடக்குவார் எவர் உளர் என்று கொக்கரித்தபடி.

"ஜனநாயகம் நடக்கிறது—மொழி ஆதிக்கச் சண்டை கூட ஓயவில்லை.

"காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம். கள்ளுக்கடை ஒழிப்பிலே கூட வெற்றி காணாமல், கடைகளைத் திறந்து வைக்கவும் துணிந்த நிலையில்; காந்தி அடிகள் மகான், அற்புதம் நடத்தினார், மறைந்தார்- என்ற முறையிலே எண்ணிக் கொள்ளுகிற வரையில், இந்த நிலை மாறாது.

"காந்தி அடிகள் மறையவில்லை; நம்மோடு இருக்கிறார், நம்முள் இருக்கிறார், நம்முடன் கலந்து விட்டார் என்று எண்ணுதல் வேண்டும். அவருடைய எண்ணங்கள் மடிந்து விடவில்லை; அவைகளை நம்முடைய இலட்சியமாகக் கொண்டுள்ளோம் என்ற உறுதி பிறந்திட வேண்டும். மறைந்த காந்தி அடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுவதன் பொருள் இதுவாகவே இருக்கவேண்டும்.

"அவர் இறவாப் புகழ் பெற்றார் என்பதனை எடுத்துரைக்கும் நாள் மட்டுமல்ல இது, அவருடைய எண்ணங்களை ஏற்றுக் கொண்டவர்கள் நாங்கள், எனவே அவர் காண விரும்பிய மாண்பு பிறந்திடப் பணிபுரிவோம் என்ற உறுதி பெற!

"அவருடைய நாட்களில் அவர் குரல் கேட்டு, அன்னிய அரசு வெருண்டோடிற்று. ஆனால் ஓட்டப்பட வேண்டியவை பல இருக்கின்றன.

"பொய்ம்மையும் கயமையும்"

"கல்லாமையும் இல்லாமையும்"

"ஜாதிப்பித்தமும் வகுப்புமாச்சரியமும்"

வெருண்டோட வேண்டும். அதற்குத் தேவைப்படும்,

"தூய்மையும் வாய்மையும்"

"அஞ்சாமையும் பணியாற்றும் தன்மையும்"

நம் ஒவ்வொருவருக்கும் இன்றே பிறந்திட வேண்டும். அதற்கே இன்று காந்தியடிகளின் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்.



"பரம ஏழைகளும் இது தங்கள் நாடு என்று எண்ண வேண்டும். அதன் அமைப்பில் தங்களுக்கு முக்கியத்துவமும், அதிகாரமும் இருக்கிறது என்று அவர்கள் நினைக்கவேண்டும். மக்களில் உயர்ந்த சாதி, தாழ்ந்த ஜாதி என்பதே இருக்கக்கூடாது. எல்லாச் சமூகத்தினரும் அன்னியோன்யமாய் வாழ வேண்டும். அத்தகைய இந்தியா உருவாகவே நான் பாடுபடுவேன்."

"இதுவே உலக உத்தமர் காந்தி அடிகளின் இலட்சியம் என்று பண்டித ஜவஹர்லால் நேரு கூறியதை நினைவுபடுத்துகிறேன்."

[1967-ஆம் ஆண்டு, அக்டோபர் 2-ஆம் நாள் சென்னை வானொலியில் அப்போது முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய உரை]

[நன்றி : அனைத்து இந்திய வானொலி, சென்னை]

# உலக உத்தமரின் ஒப்பற்ற சிறப்பு!



நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும், நல்லாட்சி அமைக்கப் பல கலைவாணரையும், மக்களை நல்வழிப்படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும். எந்த நாட்டிலும், அனைவரும் ஏக காலத்தில் கிடைக்க மாட்டார்கள்.

ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலை முறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம் பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏக காலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ள வேண்டிய குணத்தை அவர் ஒருவர் கொண்டிருந்தார். உலக வரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது.

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு—போர்த்திறனால்; நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு—அறிவின் மேம்பாட்டினால்; மக்களை நல்லவர்களாக்கினவர்கள் உண்டு—தூய்மையினால்; மூன்று அரும் பணிகளையும் ஒரு சேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு, உத்தமர் காந்தியார் ஒருவருக்கேதான் உண்டு!

—பேரறிஞர் அண்ணா.

# அண்ணல் காந்தியடிகளுக்குத் தமிழகம் அமைத்துள்ள நினைவுச் சின்னங்கள்



காந்தி மண்டபம் (சென்னை, சர்தார் வல்லபாய் பட்டேல் சாலையில் அமைந்துள்ளது).



காந்தி இல்லம் (சென்னை, அரசினர் தோட்டத்தில் அமைந்துள்ளது).



அண்ணலின் சிலை (சென்னை, காமராஜ் சாலையில் அமைந்துள்ளது).

காந்தி பொருட்காட்சியகம் (மதுரையில் அமைந்துள்ளது).



காந்தி நினைவு மண்டபம் (கன்னியாகுமரியில் அமைந்துள்ளது).



தமிழகத்தின் பல்வேறு நகரங்களிலும், முக்கிய ஊர்களிலும் அண்ணலின் நினைவாகச் சிலைகளும், பூங்காக்களும் பாலங்களும் அமைக்கப்பட்டுள்ளன.



# காந்தியடிகள் கண்ட கனவு நனவாகிறது



தீண்டாமை ஒழியவேண்டுமானால்—ஏற்றத் தாழ்வற்ற சமதர்மச் சமுதாயம் ஏற்பட வேண்டுமானால்—அரிசனங்கள் அனைவரும் அரசியல், பொருளாதாரம், சமுதாயம் ஆகிய மூன்று துறைகளிலும் முன்னேற வேண்டும் என்று உலக உத்தமர் அண்ணல் காந்தியடிகள் இலட்சியக் கனவு கண்டார். அண்ணல் கண்ட கனவை நனவாக்க, தமிழ்நாடு அரசு ஆரம்ப காலம் முதலே முயன்று வருகிறது. அதில் குறிப்பிடத் தகுந்த வெற்றியும் பெற்றுள்ளது. அரிசனங்களை முன்னேற்றி அண்ணலின் இலட்சியக் கனவை முழு அளவில் நிறைவேற்ற முயன்று வரும் இன்றையத் தமிழ்நாடு அரசு, இவ்வாண்டில் என்னென்ன திட்டங்களை நிறைவேற்றவிருக்கிறது என்பதை மாண்புமிகு தமிழ்நாடு அரிசன நலத்துறை அமைச்சர் திரு. பெ. சௌந்தர பாண்டியன் அவர்கள் இக்கட்டுரையில் விளக்குகிறார்.

தமிழகத்தின் அரிசன மற்றும் பழங்குடியினரின் மக்கட்தொகை 76 இலட்சமாகும். இது மாநில மொத்த மக்கள் தொகையில் 18 சதவீதமாகும். இதில் 83 சதவீத மக்கள் கிராமப்புறங்களிலும் மீதி 17 சதவீத மக்கள் நகர்ப்புறங்களிலும் வசித்து வருகின்றனர். இம்மாநிலத்தில் அரிசன நல முன்னேற்றத்திற்காக அரசு கொண்டுவந்துள்ள பலமுனைத் திட்டங்களின் கீழும், வேளாண்மை, வருவாய், கூட்டுறவு போன்ற பல பொதுத்துறைகளின் மூலம் ஏனைய பொதுமக்கள் பெறும் நலனையும் பெறுகின்றனர். மேலும் அரிசன மற்றும் பழங்குடியினர் நலத்துறையினர் செயல்படுத்தும் திட்டங்களின் வாயிலாகவும் அரிசன மக்கள் பலன் பெறுகிறார்கள்.

அரிசன மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள்

ஆகியவற்றைத் திரும்ப அளித்து விடுவது, பெற்றோர்களின் வருமான வரம்பைக் கருதாது அனைத்து அரிசன மற்றும் பழங்குடி மாணவர்களுக்கும் பள்ளி இறுதியாண்டுவரை இலவச புத்தக வசதி கொடுப்பது என்ற அரசின் முடிவை உறுப்பினர்கள் ஏற்கெனவே அறிந்திருப்பார்கள். மேலும் பெற்றோர்களின் வருமான வரம்பைக் கருதாது அனைத்து அரிசன, பழங்குடி மாணவர்களின் உயர்கல்வி நிலையிலும் அவர்களுடைய படிப்புக் கட்டணத்தை அரசு ஏற்றுக்கொள்ள முடிவு செய்துள்ளது. இதன் விளைவாக அரிசன மற்றும் பழங்குடி மாணவர்கள் அனைத்து கல்வி நிலைகளிலும் இலவசக் கல்வி பெறுவார்கள்.

மேலும், பழங்குடியினர் மேம்பாட்டிற்காக, முந்தைய ஆண்டின் ஒதுக்கீடான 101.82 இலட்சத்திற்கு மாறாக இந்த ஆண்டு 153 இலட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுவரையிலும் அரிசன பால் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு ரூ. 125 மானியமாகவும் ரூ. 375 கடனாகவும் கறவை இனங்கள் வாங்கும் பொருட்டுக் கொடுக்கப்பட்டது. இப்பொழுது இத்திட்டம் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளின் திட்டத்தின்கீழ் இணைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் உறுப்பினர்கள் ரூ. 500-ஐ அரசின் மான்யமாகவும் ரூ. 1,000-ஐ நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடனாகவும் பெறுவார்கள்.

முன்னோடிப் பயிற்சி நிலையத்தில் பயின்று இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி மற்றும் இந்திய காவல்துறைப் பணியாளர் தொகுதி ஆகிய போட்டித் தேர்வுகளில் வெற்றி பெறும் அரிசன, மற்றும் பழங்குடி மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 மானியமாக வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று 1976-ல் தேர்வு எழுதிய 36 மாணவர்களில் இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி மற்றும் பல்வேறு பணிகளுக்கு 11 மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள் 1975-ஆம் ஆண்டுப் பயிற்சி பெற்று இவ்வாண்டு தேர்வு எழுதிய 2 மாணவர்களும் அனைத்திந்தியப் பணிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். மொத்தம் 13 மாணவர்களில் எட்டு மாணவர்கள் தமிழ் நாட்டைச் சார்ந்தவர்கள்.

1976-77-ல் அரிசனங்களுக்கு வீட்டுமனை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்ட ரூ. 52 இலட்சத்திற்கு மாறாக இந்த ஆண்டு ரூ. 100 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக அனைத்து அரிசனக் குடும்பங்களுக்கும் வீட்டுமனை வழங்குதலை மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்ற அரசு எண்ணியுள்ளது.

அரிசனக் காலனிகளில் குழந்தைகள் காப்பகங்களைத் திறப்பதற்கு அரசு உத்தேசித்துள்ளது. அதில் 90 சத வீதம் அரிசனச் சிறார்களாக இருப்பார்கள். ஒவ்வொரு குழந்தைகள் காப்பகத்திலும் 70 குழந்தைகள் இருப்பார்கள். 1977-78-ல் 50 குழந்தைகள் காப்பகங்கள் திறக்கப்படும்.

மேற்குறிப்பிட்டவைகள் அரிசன மற்றும் பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக இந்த அரசு அண்மைக்காலத்தில் எடுத்துள்ள சில முக்கிய நடவடிக்கைகள் ஆகும். தாழ்த்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக அரசு மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

அரிசன (பழங்குடி) நலநிதிக் கோரிக்கையின் கீழ் ''மூலதனச் செலவு'' என்ற தலைப்பின் கீழ் 62.40 இலட்சம் ஒதுக்கியிருப்பதுடன், ''கடன்களும் முன்பணங்களும்'' என்ற தலைப்பின்கீழ் ரூ. 27.04 இலட்சமும் 1977-78-ஆம் ஆண்டிற்கென இத்துறைக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற் கொள்ளப்பட்டால், 1977-78-ல் அரிசனப் பழங்குடி மக்கள் நலத் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 1595.60 இலட்சமாகும். இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள பணிகளுக்காக ரூ. 8,29.90 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்தொகையில் மத்திய அரசு ஆதரவுள்ள பணிகளுக்கான ரூ. 71.84 இலட்சமும் மாநிலத்திட்டப் பணிகளுக்கான ரூ. 7,58.06 இலட்சமும் அடங்கும்.

அரிசன, பழங்குடி மக்களின் நலன்களைப் பேணுவதற்காகத் தமிழ்நாடு அரசு ஆற்றும் ஆக்கப்பணிகளை

1. கல்வி.

2. வேலை வாய்ப்பு, பொருளாதார முன்னேற்றம்.

3. சுகாதாரம், வீட்டு வசதித் திட்டங்கள் என்ற இந்த மூன்று முக்கிய தலைப்புகளின் கீழ் விவரம் காணலாம்.

## கல்வி

ஆண்டுதோறும் அரிசன, பழங்குடி மக்களின் நலத்திற்கென ஒதுக்கப்படும் நிதியில் பெரும்பகுதி அரிசனங்கள் பழங்குடியினர் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.

1976-77-ஆம் ஆண்டில் அரிசனப் பழங்குடி மக்கள் நலனுக்காக ஒதுக்கப்பட்ட ரூபாய் 1367.38 இலட்சத்தில் அரிசனப் பழங்குடியினர் கல்விக்காக மட்டும் ரூபாய் 798.43 இலட்சம் ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் 1977 78-ஆம் ஆண்டிற்கு அரிசனப் பழங்குடியினர் நலத்துக்காக ரூபாய் 1595.60 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் அரிசனங்கள் பழங்குடி மக்களின் கல்விக்காக மட்டும் ரூபாய் 908.14 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.

### படிப்பு உதவித் தொகைகள்

அரிசன, பழங்குடி வகுப்பைச் சார்ந்த (மதம் மாறியவர்கள் உட்பட) மாணவ, மாணவியர்களுக்குத் தங்கிப் பயிலுவதற்கென உதவித் தொகைகளும், படிப்புதவித் தொகைகளும், தொடரா மானியங்களும், பள்ளி இறுதிப் படிப்பிற்குப் பிறகு கலைப் படிப்பு, அறிவியல் படிப்பு, தொழிற்படிப்பு இவற்றில், பட்ட மேற்படிப்பு வரையிலும் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன.

பொறியியல், வேளாண்மை, மருத்துவம் போன்ற தொழிற் கல்வி கற்கும் மாணவர்கள்

அரசினரால் வழங்கப்படும் உதவித் தொகைகளுக்கு மேல் கூடுதலாகச் செலவு செய்ய நேரிடுகிறது. எனவே, இதனை உரியவாறு பரிசீலித்த பின்னர், தேவைப்படும் மாணவர்களுக்குக் கடன் வழங்கவும் ஆணை பிறப்பித்துள்ளது. பட்டப் படிப்பு பயிலும் மாணவர்களுக்குக் கடனுதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், 1977-78-ஆம் ஆண்டிற்காக, அரிசன மாணவ மாணவியருக்கு ரூ. 8.50 இலட்சமும், கிறித்தவ மதத்திற்கு மாறிய அரிசன மாணவ மாணவியருக்கு ரூ. 1.22 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

## அரிசன-பழங்குடி நலத்துறைப் பள்ளிகள்

அரிசன நலப் பள்ளிகள் : இம் மாநிலத்தில் கீழே குறிப்பிட்டுள்ளது போல், மொத்தம் 942 அரிசன நலப் பள்ளிகள் உள்ளன.

1. தொடக்கப் பள்ளிகள்—742
2. நடுநிலைப் பள்ளிகள் —79.
3. உயர்நிலைப் பள்ளிகள்—21
4. ஓராசிரியர் பள்ளிகள்—100.

மொத்தம்—942

மேற்கூறிய பள்ளிகளில் 1.36 இலட்சம் அரிசன பழங்குடி மாணவ மாணவியர்கள் கல்வி கற்கின்றனர்.

செங்கல்பட்டு மாவட்டம் பாலவாக்கத்திலுள்ள தொடக்க நிலைப் பள்ளி, 1977-78-ஆம் ஆண்டில் நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படக் கருதப்பட்டுள்ளது.

## அரிசனப் பழங்குடிகள்

பழங்குடி மாணவ மாணவியர்களுக்காக 78 உறைவிடப் பள்ளிகளை அரிசன நலத்துறை நடத்தி வருகிறது. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| தொடக்கநிலைப் பள்ளிகள் | ... | 64 |
| நடுநிலைப் பள்ளிகள் | ... | 11 |
| உயர்நிலைப் பள்ளிகள் | ... | 3 |
| மொத்தம் | ... | 78 |

இவைகளைத் தவிர, பழங்குடி மாணவர்களின் நலனுக்காக உறைவிட வசதியில்லாப் பள்ளி ஒன்று, மதுரை மாவட்டத்திலுள்ள மஞ்சப்பரப்பு என்னுமிடத்தில் நடைபெற்று வருகின்றது.

1977-78ல் பழங்குடி மாணவர்களின் நலனுக்காக, ஏழு உறைவிடப் பள்ளிகள் (தென்னார்க்காடு மாவட்டத்தில் மூன்றும், தருமபுரி மாவட்டத்தில் இரண்டும், கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஒன்றும், திருச்சி மாவட்டத்தில் ஒன்றும்) திறக்கப்படவிருக்கின்றன.

1977-78ல் நான்கு அரிசன நல உயர்நிலைப் பள்ளிகளுக்கும், பழங்குடி மாணவ மாணவியர் அரசினர் உறைவிட உயர்நிலைப் பள்ளி ஒன்றுக்கும், ஆய்வுக் கூட வசதிகள் அமைக்கும் செயற் திட்டம் உள்ளது. இதற்காக 1977-78-ஆம் ஆண்டுக்கு ரூ. 2.06 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

1977-78-ஆம் ஆண்டில் 24 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் (அரிசன-பழங்குடி உயர்நிலைப் பள்ளிகள்) நூலக வசதி செய்து கொடுக்கும் திட்டமொன்று உள்ளது. அதன் பொருட்டு 1977-78-ஆம் ஆண்டுக்கு ரூ. 0.24 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அரிசன நலத் துறைப் பள்ளிகளில் கூடுதல் வசதிகள்

அரிசன நலப் பள்ளிகள் அமைந்துள்ள கட்டடங்களைப் பேணுவதற்காகவும் புதிய கட்டடங்களைக் கட்டுவதற்காகவும் 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 10.20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சுற்றுலா

பொது அறிவு பெறுவதற்காக அரிசனப் பழங்குடி மாணவர்கள் ஆண்டிற்கு ஒரு முறை நமது நாட்டிலுள்ள முக்கிய இடங்களுக்குச் சுற்றுலா செல்லும் திட்டங்களுக்காக 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 27,000 ஒதுக்கப்பட்டுள்ளது.

## மதிய உணவு

அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டம் மாணவர்கள் தவறாமல் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்

## 1977-78-ல் புதிய சலுகைகள்

இக்கல்வி ஆண்டிலிருந்து மெட்ரிக்குக்கு முன் பயிலும் எல்லா மலை சாதியினர், அரிசன மாணவர்களுக்கு அவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானத்தைப் பாராமல் எல்லாப் பாடப்புத்தகங்களையும் இலவசமாக வழங்கவும், இம்மாணவர்கள் பள்ளிகளுக்குச் செலுத்த வேண்டிய சிறப்புக் கட்டணத்தை அரசே நேரிடையாகப் பள்ளிகளுக்குக் கொடுக்கவும், மற்றும் பள்ளி இறுதித் தேர்விற்கான கட்டணத்தை மாணவர்களிடமிருந்து பெறப்படாமல் அரசால் அரசுத் தேர்வு இயக்குநருக்கு அளிக்கப்படவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மெட்ரிக்குக்குப் பின், புகுமுக வகுப்பிற்குள்ள எல்லாப் பயிற்சிகளுக்கும் இம் மாணவரின் பெற்றோரின் வருமானம் பாராமல் கல்லூரிப் படிப்புக் கட்டணச் சலுகை அளிக்கப்படும். இம் முடிவுகளினால் அரிசனங்கள், மலைசாதியினர் மாணவர்கள் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி பெறுவார்கள். பள்ளி மாணவர்கள் இலவசக் கல்வியுடன் எல்லாப் பாடப் புத்தகங்களும் பெறுவார்கள். இதற்கென ரூ. 26 இலட்சம் ஒதுக்கப்படும்.

## மாணவர்களுக்குச் சீருடை வழங்குதல்

அரிசன நலப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவிகளுக்கும் அரசு விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவிகளுக்கும் ஒவ்வோராண்டும் இரு இணை (ஜோடி) சீருடைகள் வழங்கப்படுகின்றன.

நான்காவது வகுப்பு முதல் பதினோராவது வகுப்பு வரையில் பயிலும் அனைத்து விடுதி மாணவர்களுக்கும் அரசினர் அரிசன நல மாணவர் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கும் ஒவ்வோராண்டும் இரு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன. அரிசன நலப் பள்ளிகளில் முதல் வகுப்பு முதல் 5வது வகுப்பு வரையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் ஒரு இணை சீருடைகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.

**பாலர் பள்ளிகள் :** 1977-78-ஆம் ஆண்டில் 90 சதவீதம் அரிசனக் குழந்தைகள் வசிக்கும் கிராமங்களிலுள்ள அரிசனக் குடியிருப்புகளில் பாலர் பள்ளிகள் திறக்கும் திட்டம் ஒன்றுள்ளது. ஒவ்வொரு பாலர் பள்ளியிலும் 70 அரிசனக் குழந்தைகள் இருப்பார்கள். பணி புரியும் அரிசனப் பெண்மணிகளுக்கு அவர்கள் குழந்தைகளைப் பராமரிக்கும் பொறுப்பைக் குறைப்பதும் சிறு பருவத்தில் குழந்தைகளிடையே நல்ல சுகாதாரப் பழக்க வழக்கங்களை ஏற்படுத்துவதும், தவறாமல் பள்ளிக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத்துவதால் பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்திக் கொள்வோர் எண்ணிக்கை குறையும் என்பதும் இப் பள்ளிகளின் தலையாய நோக்கமாகும். மேலும், வளரும் பருவத்திலுள்ள சிறார்களுக்குச் சீரான சத்துள்ள உணவளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் பொருட்டு 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 2.02 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தும் நோக்கத்துடனும், மேலும் பெற்றோர்கள் வறுமையின் காரணமாகத் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பாமல் வேலைக்கு அனுப்புவதைத் தடுக்கும் நோக்கத்துடனும் உருவாக்கப்பட்டுள்ளது.

'கேர்' உணவுத் திட்டத்தின் கீழ் பள்ளியாண்டில் 100 நாட்களுக்கு, ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 90 கிராம் உணவு தானியங்களும், 6 கிராம் எண்ணெய்யும் கல்வித் துறை வழங்குகின்றது. எஞ்சிய 120 நாட்களுக்கு அரசு உணவுப் பொருள் வழங்கு துறை மூலமாகக் கிடைக்கும் அரிசியைக் கொண்டு மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கப்படுகின்றது.

இத் துறையிலுள்ள 942 பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்குவதற்காக 1977-78-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ. 37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவையன்றி 70 சதவீதத்திற்கும் அதிகமான அரிசன மாணவர்கள் பயிலும் அரிசன நலப் பள்ளிகள் அல்லாத பிற 350 பள்ளிகளுக்கு மதிய உணவு வழங்கும் பொருட்டு ரூ. 8.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மாணவர் இல்லங்கள் :** தொலை தூரத்திலுள்ள கிராமங்கள், நகரங்களிலிருந்து பள்ளிகள், கல்லூரிகள், தொழிற் பயிற்சிப் பள்ளிகளுக்கு வரும் மாணவ மாணவியர்களுக்கு இல்ல வசதிகள் தொடர்ந்து அளிக்கப்படுகின்றன. நிதி நிலைமையைப் பொறுத்தும் தேவைக்கேற்பவும் புதிய இல்லங்கள் ஆண்டுதோறும் கூடுதலாகத் திறக்கப்படுகின்றன. தனியார் நடத்தும் மாணவர் இல்லங்களை படிப்படியான திட்டத்தின் கீழ் அரசு ஆண்டுதோறும் தனது ஆளுகையில் மேற்கொள்கிறது.

அரிசன மாணவர்களுக்காக மொத்தம் 587 மாணவர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 36,731 மாணவர்கள் தங்கியுள்ளனர்.

பழங்குடியினர்களைப் பொறுத்த வரையில் இம் மாநிலத்தில் 18 மாணவர் இல்லங்கள் உள்ளன. இவற்றில் மொத்தம் 760 மாணவர்கள் தங்கியுள்ளனர். 1977-78-ஆம் ஆண்டில் ஒரு பழங்குடி மகளிர் விடுதி 30 மாணவிகள் தங்குவதற்கு கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பேச்சிப்பாறையில் திறக்கப்படவிருக்கிறது. மேலும் 505 அரிசன மாணவ மாணவிகள் தங்குவதற்கான 12 உயர்நிலைப் பள்ளி விடுதிகள் (மாணவிகளுக்காக 5 மாணவர்களுக்காக 7) திறக்க ஆணையிடப்பட்டுள்ளன.

புதிதாக மாணவர் இல்லங்கள் திறக்கவும் ஐந்தாவது திட்டக் காலத்தில் திறக்கப்பட்ட

சைதாப்பேட்டையில் அண்மையில் திறக்கப்பட்டுள்ள அரிசன மாணவர் இல்லம்.



மாணவர் இல்லங்களைப் பராமரிக்கவும் 1977-78ஆம் ஆண்டில் ரூ. 17.66 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசன பழங்குடி மாணவர்களுக்கான அரிசன மாணவர் இல்லங்களில் வசிக்கும் மாணவர்களுக்காகக் கொடுக்கப்படும் உணவுச் செலவுத்தொகை வீதங்கள் வருமாறு:—

| மாணவர் இல்லங்களின் வகை | மாணவர் ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு வழங்கப்படும் தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | ரூபாய் |
| 1. சென்னை மாநகரில் உள்ள அரசினர் கல்லூரி மாணவர்கள் மாணவிகள் இல்லங்கள், தொழிற்பயிற்சி பள்ளி மாணவர் இல்லங்கள் | 65 |
| 2. வெளியூர்களில் உள்ள தொழிற் பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கான அரசினர் மாணவர் இல்லங்கள் | 55 |
| 3. வெளியூர்களில் உள்ள கல்லூரி மாணவர்களுக்கான அரசினர் மாணவர் இல்லங்கள் | 50 |
| 4. உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கான அரசினர் மாணவர் இல்லங்கள் | 40 |

### மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுதல்

அரிசன நலத் துறையால் நடத்தப்படும் மொத்தம் 605 இல்லங்களில் (அதாவது, அரிசன மாணவர்களுக்கானவை 587; பழங்குடி மாணவர்களுக்கானவை 18) 80 இல்லங்கள் (அரிசன மாணவர் இல்லங்கள் 69; பழங்குடி மாணவர் இல்லங்கள் 11) அரசுக் கட்டடங்களிலும், எஞ்சியவை வாடகைக் கட்டடங்களிலும் உள்ளன.

அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக்கழகம், அரிசன பழங்குடி மாணவர்களுக்கான இல்லங்கள் கட்டும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. மாணவர் இல்லக் கட்டடங்கள் கட்டுவதற்காக 1977-78-ஆம் ஆண்டில், ரூ. 60.54 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், பத்துக்காணியில் அரசினர் பழங்குடி மாணவியர் இல்லம் கட்டுவது தொடர்பாக மாநில அரசுக்கும் இந்திய அரசுக்கும் இடையே கடிதத் தொடர்பு நடைபெற்று வருகிறது.

### தனியார் மாணவர் இல்லங்களுக்கு உதவித் தொகை :

மேற்சொன்ன அரசினர் மாணவர் இல்லங்களைத் தவிர உதவித் தொகை பெற்று, தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் 45 மாணவர் இல்லங்களும் உள்ளன. இந்த இல்லங்களில் தங்கிப் பயிலும் மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு உணவுக் கட்டண மானியமாக ரூ. 25 வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகை 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இதைப் போலவே, பழங்குடியினரின் பயனுக்கெனவே தங்கிப் பயிலும் வசதியுடன் கூடிய பழங்குடியினர் பள்ளிகள் நான்கும் தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன. இதற்காக 1977-78ஆம் ஆண்டில் ரூ. 6.70 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## வேலைவாய்ப்பும், பொருளாதார மேம்பாடும்

அரிசன, பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் உழவுமாடுகள், விதைகள், விவசாயக் கருவிகள் வாங்குவதற்காக நபர் ஒன்றுக்கு ரூ. 600 வீதம் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதைப் போலவே கிணறு ஒன்றுக்கு ரூ. 2,500 வீதம் பாசனக் கிணறுகள் தோண்டவும் உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1977-78ஆம் ஆண்டில் இதற்காக அரிசனங்களுக்கும் பழங்குடியினருக்கும் முறையே ரூ. 7.10 இலட்சமும், ரூ. 2.39 இலட்சமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பழங்குடி மக்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 2.39 இலட்சத்தில் நீலகிரி மாவட்டம் கொல்லைக்கரைப் பகுதியில் காப்பி விளைச்சலைப் பெருக்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 0.88 இலட்சமும் அடங்கும். இத் திட்டம், சென்னை வேளாண்மைத் துறை இயக்குநரால் நிறைவேற்றப்படுகிறது.

## சட்டப்பட்டதாரிகளுக்கு நிதி உதவி

அரிசனங்கள்—பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்தவர்களிலுள்ள சட்டப் பட்டதாரிகள் சட்டத் தொழில் மேற்கொள்ளுவதற்கு அவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களுக்கு நிதி உதவி வழங்கப்படுவதற்கான முக்கியத் திட்டமொன்றை அரசு கொண்டு வந்துள்ளது. இத் திட்டத்தின் கீழ் அரிசனங்கள்—பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த சட்டப் பட்டதாரிகள் சட்டத் தொழிலை மேற்கொள்ள விரும்பினால் அவர்களில் ஐந்து பேருக்கு, கீழ்க்காணும் நிதி உதவியை அரசு அளித்து வருகிறது.

1. சட்டத் தொழிலில் தங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம், அறை வாடகை முதலியவற்றிற்காக ஒவ்வொரு சட்டப் பட்டதாரிக்கும் ரூ. 750 கடன் வழங்குதல்.

2. புத்தகங்கள், மேசை நாற்காலி வாங்குவது முதலியவற்றிற்காக ஒவ்வொரு சட்டப் பட்டதாரிக்கும் ரூ. 500 உதவித் தொகை வழங்குதல்.

### இலவசமாக கருவிகள் வழங்குதல்

கருமார் தொழில், தச்சுத் தொழில், தையல் வேலை மற்றும் ஏனைய 18 தொழில்களில், தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்களுக்குக் கருவிகளையும், சாதனங்களையும் இலவசமாக வழங்கும் திட்டம் தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78ல் இத் திட்டத்திற்காக ரூ. 3.63 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

### சிறு தொழில் கடன்

சைக்கிள் கடைகள், ஓட்டல்கள், மளிகைக் கடைகள் போன்ற பல தொழில்கள் நடத்துவதற்காக அரிசனங்களுக்குச் சிறு தொழில் கடன் வழங்கும் திட்டம் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. தொழிலின் தன்மையைப் பொறுத்து ரூ. 125லிருந்து ரூ. 15,000 வரை கடன் தொகை வழங்கப்படுகிறது.

1977-78ஆம் ஆண்டில் அரிசனங்களுக்காக ரூ. 10 இலட்சமும், கிறித்தவர்களாக மதம் மாறிய அரிசனங்களுக்காக ரூ. 1.25 இலட்சமும், பழங்குடியினருக்காக ரூ. 0.40 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

### பயிற்சி நிலையங்கள்

அரசினர் தொழிற் பயிற்சி நிறுவனங்களிலும், கிண்டியிலுள்ள மாதிரிப் பயிற்சிப் பள்ளியிலும், பயிற்சி பெற்று வருகின்ற அரிசன, பழங்குடி மாணவர்கள் அனைவருக்கும், அரிசன நல நிதிகளிலிருந்து திங்கள் ஒன்றுக்கு ரூ. 45 உதவித் தொகை வழங்கப்படுகின்றது. இதற்காக 1977-78ஆம் ஆண்டு ரூ. 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு

### (அ) அரிசனங்கள்

தொழில் துறையில் அரிசனங்கள் விரைவாக முன்னேற உதவுவதற்காக, அரசு குடிசைத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்—பயிற்சி, உற்பத்தி நிலையங்கள்—பணி நிலையங்கள் பலவற்றை அமைத்துள்ளது. இவை தேவையான தொழில் நுட்ப உத்திகளையுடைய தொழில் வணிகத் துறை இயக்குநர், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், சமூக நலத் துறை இயக்குநர் ஆகியோரால் நடத்தப்படுகின்றன. இந்த நிலையங்களையும், சங்கங்களையும் நடத்துவதற்கான செலவுத் தொகையை அரிசன, பழங்குடி நலத் துறை ஏற்றுக் கொள்கிறது. 1977-78ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம் காவேரிப் பட்டினத்தில் தையல் தொழிற்பயிற்சி நிலையம் ஒன்றை 1977-78ஆம் ஆண்டில் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### (ஆ) பழங்குடியினர்

பல்வேறு சுரண்டல்காரர்களின் பிடியிலிருந்து பழங்குடியினரை மீட்கவும் அவர்கள் தங்களது காடுபடு பொருட்களை விற்பனை செய்ய இயலும் பொருட்டும் அவர்களின் பொருளாதார நிலைமையைச் சீரமைக்கவும் இவ்வரசு இம்மாநிலத்தில் பழங்குடியினர்களுக்கான கூட்டுறவு விற்பனைச் சங்கங்களையும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களையும் அமைத்துள்ளது.

நியாயமான வட்டி வீதத்தில் நிதி உதவி நிறுவனங்கள் மூலமாகப் பழங்குடியினருக்கு மாற்றுக் கடன் வழங்குவதற்காக பழங்குடியினர் வாழுகின்ற பகுதிகளில் ''லாம்ப்ஸ்'' (பெரிய அளவிலான பலநோக்குச் சங்கங்கள்) அமைக்கக் கருதப்பட்டுள்ளது. இச்சங்கங்கள் உற்பத்திக் கடன் மட்டுமல்லாது பயனீட்டுக் கடனும் (Consumption credit) வழங்குகின்றன. வேளாண்மை இடுபொருட்கள் வழங்குவதற்காகும் செலவிற்காக நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகளிடமிருந்து கடன்கள் பெறவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

### பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள்

பயிர்த் தொழில் நடைபெறாத காலங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதற்காகவும், ஏழை அரிசனங்களுக்கு உதவுவதற்காகவும், பால் வழங்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்சங்கங்

## காந்தியடிகள் செய்த காலணி

டால்ஸ்டாய் பண்ணையில் வசிக்கும்போது காலன்பார்க்கும் காந்தியடிகளும் செருப்புத் தைக்கக் கற்றுக் கொண்டார்கள். சிறைவாசத்தில் பொழுது போக்கவும், கடுங்காவல் தண்டனையை நிறைவேற்றவும் காந்தியடிகள் செருப்புத் தைக்கலானார்.

ஜெனரல் ஸ்மட்ஸுக்குக் காந்தியடிகளிடம் அரசியல் விவகாரங்களில் விரோதமிருந்தாலும், தனிப்பட்ட முறையில் பிரியமுண்டு. அவருடைய அஹிம்ஸா மார்க்கம் ஸ்மட்ஸைப் பெரிதும் வசீகரித்துவிட்டது. காந்தி சிறையிலிருக்கும் போது வாரா வாரம், ஜெனரல் ஸ்மட்ஸ் புத்தகங்கள் அனுப்புவது வழக்கம்.

விடுதலை பெற்றதும் காந்தியடிகள் ஜெனரல் ஸ்மட்ஸைப் பேட்டி கண்டார். சிறையில் தாம் தைத்த ஒரு ஜோடி செருப்புக்களை அவருக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார். சாகும் மட்டும் அதைப் பெரிய பொக்கிஷமாகப் போற்றி வந்தார் ஜெனரல் ஸ்மட்ஸ். ஒரு சமயம் நண்பர் ஒருவரிடம் ஜெனரல் ஸ்மட்ஸ் பின்வருமாறு கூறினார் :

''நான் சிறையில் தள்ளிய அந்த மனிதனின் (காந்தியின்) போராட்டத்தைப் பற்றியும், அவருடைய பெருந்தன்மை, தூய்மை ஆகியவைகளைப் பற்றியும் முதலில் தெரிந்து கொண்டவன் நான்தான். என்னுடைய உபயோகத்துக்காகவே அளிக்கப்பட்டன என்றாலும், இந்தப் பாதரட்சைகளின் மீது காலை வைக்க மனம் கூசுகிறது. சத்தியத்தில் நம்பிக்கையும் எதிரியிடம் அன்பும் கொண்ட வீரனால் உருவாக்கப்பட்ட இவற்றை ஞாபகச் சின்னமாகவே போற்றி வருகிறேன்.''

களில் சேர்ந்துள்ள ஒவ்வொரு உறுப்பினருக்கும், கறவை மாடுகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,500 வீதம் இரண்டு கறவை மாடுகள் வாங்குவதற்குரிய பணவுதவி அளிக்கப்படுகிறது. இதில், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து 1,000 ரூபாயும் அரசு நிதியிலிருந்து 500 ரூபாயும் அளிக்கப்படுகிறது. இம் முறையிலான திட்டம் 1977-78ஆம் ஆண்டிலிருந்து நடைமுறையிலுள்ளது.

அரிசனங்கள், கிறித்தவர்களாக மதம் மாறிய அரிசனங்கள் ஆகியோருக்கான உதவித் தொகை மானியத் திட்டத்திற்காக 1977-78 ஆம் ஆண்டில் ரூபாய் 1.40 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பொதுச் சுகாதாரமும் வீட்டு வசதியும்

### வீட்டு மனைகள் :

எங்கெல்லாம் அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைக்கின்றனவோ அங்கெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்படுகின்றன. அரசு நிலங்கள் கிடைக்காத இடங்களில், 1894-ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்தல் சட்டத்தின் கீழ், தனியார் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, வீட்டு மனைகளாக அரிசனங்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 முதல் 5 செண்ட் வரை பரப்பளவுள்ள வீட்டு மனை வழங்கப்படுகிறது. 1949-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரை மொத்தம் 16,841.92 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு 2,62,906 வீட்டு மனைகள் வழங்கப்பட்டன. அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கென நிலம் கையகப்படுத்துவதற்காக 1976-ஆம் ஆண்டு வரை 516 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. இயன்ற வரை, சாதி இந்துக்களின் குடியிருப்புகளுக்கு அருகிலேயே அரிசனங்களுக்கு வீட்டு மனைகள் ஒதுக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்திற்கென 1976-77-ஆம் ஆண்டில் 984.95 ஏக்கர் பரப்பளவுள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டு 19,267 வீட்டு மனைகள் வழங்கப்படுவதற்காக 48.31 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. அரிசனங்களாய் இருந்து கிறித்தவர்களாய் மாறியவர்களும் ஏனைய அரிசனங்களையும் பழங்குடியினரையும் போன்று வீட்டு மனைகள் பெற உரிமையுண்டு. இத்திட்டத்திற்கென 1977-78-ஆம் ஆண்டில் 100 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வீட்டு வசதி

1973-74-ஆம் ஆண்டில் அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதிலும் படிப்படியான திட்டத்தின் கீழ் வீடு கட்டும் பணியை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகத்திற்கென 1977-78-ஆம் ஆண்டில் 320 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடிநீர்க் கிணறுகள்

அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும், நல்ல குடிநீர் வழங்குவதற்கென அரிசனக் குடியிருப்புகளில் குடிநீர்க் கிணறுகள் தோண்டப்படுகின்றன. ஒவ்வொரு கிணற்றுக்கும் 5,000 ரூபாய் செலவாகிறது. அரிசனங்களுக்கும், பழங்குடி மக்களுக்கும் அரிசனங்களாயிருந்து கிறித்தவராக மாறியவர்களுக்கும் குடிநீர்க் கிணறுகள் தோண்டுவதற்கென 1977-78ஆம் ஆண்டில் 26.13 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வோராண்டும், படிப்படியான திட்டத்தின் கீழ், அரிசனங்களுக்காகக் குடிநீர்க் கிணறுகள் தோண்டுவதுடன் நிலமட்ட நீர்த் தேக்கங்களும் அமைக்கப்படுகின்றன. சாதாரணக் குடிநீர்க் கிணறுகளுக்குப் பதிலாகக் கூடிய வரை துளைக் கிணறுகள் (போர் வெல்) அமைக்கப்படும்.

### மின் வசதி

அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கும் வகையில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஏற்படும் இழப்பைச் சரிக்கட்ட ஒவ்வோராண்டும் அரசு இழப்பீட்டுத் தொகை வழங்குகிறது. இதற்கென்று 1957-58-ஆம் ஆண்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. அரிசனக் குடியிருப்புகளில் மின் இணைப்புக்கும் மின்சார உபயோகத்திற்கும் ஆகின்ற செலவு 1977-78

## காந்தியடிகளின் பத்திரிகைகள்

தம்முடைய கொள்கைகளைப் பரப்பவும், பொது மக்களுடன் தொடர்பு கொள்ளவும், தென் ஆப்பிரிக்காவில் இருக்கும்போது காந்தியடிகள், 'இந்தியன் ஒபினியன்' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்.

ரௌலட் சட்டம் உருவாகிக் கொண்டிருந்த சமயம் காந்தியடிகள், 'யங் இந்தியா' என்ற ஆங்கிலப் பத்திரிகையையும், 'நவஜீவன்' என்ற குஜராத்திப் பத்திரிகையையும் நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 'பம்பாய்க் கிரானிக'லின் உப பத்திரிகையாக 'யங் இந்தியா' பம்பாயிலிருந்து வெளிவந்து கொண்டிருந்தது. காந்தி பொறுப்பு ஏற்றுக் கொண்டதும், இரண்டு பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளாக மாற்றப்பட்டு, ஆமதாபாத்திலிருந்து பிரசுரிக்கப்பட்டன.

'ஹரிஜன்' : ஹரிஜன் சேவைக்காக, ஹரிஜன சேவா சங்கத்தால் 1933-ஆம் ஆண்டு துவக்கப்பட்ட வார இதழ், பிற்காலத்தில் காந்தியடிகளின் அபிப்பிராயப் பத்திரிகையாகவே மாறிவிட்டது.

ஹரிஜன் பத்திரிகையின் குஜராத்திப் பதிப்புத்தான் ஹரிஜன பந்து. ஹிந்திப் பதிப்புக்கு 'ஹரிஜன் சேவக்' என்று பெயர். பிற்காலத்தில் மராத்தி, உருது, வங்காளி, தமிழ் ஆகிய மொழிகளில் 'ஹரிஜன்' பத்திரிகை வெளிவந்தது.

கிராம உத்யோக் பத்திரிகா : காந்தியடிகளின் ஆசி பெற்று, கிராமக் கைத்தொழில் சங்கத்தார் நடத்தும் பத்திரிகை.

ஆம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்டுள்ள 83 இலட்சம் ரூபாயிலிருந்து சரிக்கட்டப்பட வேண்டும். இம் மாநிலத்திற்கு இன்னும் 500க்கு மேற்பட்ட அரிசனக் குடியிருப்புகளுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டும்.

**சமுதாயக் கூடங்கள்**

அரிசனக் குடியிருப்புகளில் வாழும் மக்கள் திருமணம், கூட்டங்கள் முதலியன நடத்துவதற்கென்று அரிசனக் குடியிருப்புகள் ஒவ்வொன்றிலும் 15,000 ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதற்கென்று 1977-78-ஆம் ஆண்டில் 1.50 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

**சமுதாய நிலையங்கள்**

அரிசனங்கள், அவர் தம் குழந்தைகள் ஆகியோரிடையே நல்ல சுகாதாரப் பழக்கங்களைப் பரவச் செய்ய ஆண் சமூகப் பணியாளர் ஒருவரும், பெண் சமூகப் பணியாளர் ஒருவரும் குற்றேவலர் (பெண்) ஒருவரும் கொண்ட 25 சமுதாய நிலையங்கள் இம் மாநிலத்தில் நடத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் தங்கள் தலைமையிடத்திலிருந்து 5 முதல் 8 கிலோ மீட்டர் வரையிலுள்ள கிராமங்களில் மும்முரப் பிரச்சாரம் செய்கின்றனர். அவர்கள், குழந்தைகளுக்கு நீராட்டி, சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருக்கும் பழக்கத்தைக் கற்றுக் கொடுக்கின்றனர். இந்நிலையங்களில் மதிய உணவும், பல வைட்டமின் சத்துள்ள மாத்திரைகளும் அரிசனக் குழந்தைகளுக்கு வழங்கப்படுகின்றன. இக் குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் ஆண்டொன்றுக்கு 14 ரூபாய் செலவில் உடைகளும் வழங்கப்படுகின்றன. இதற்கென 1977-78ஆம் ஆண்டில் 2.71 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## தீண்டாமை ஒழிப்பு

### 1955-ஆம் ஆண்டு குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் :

திருத்தப்பட்ட ''குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம்'' 19-11-1976 முதற்கொண்டு செயலுக்கு வரத் தொடங்கியுள்ளது.

இச் சட்டத்தைச் செயற்படுத்துவதில் அரசுக்கு ஆலோசனை கூற மாநில அளவில் குழுவொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இச் சட்டம் கண்டிப்பாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கவனிக்க காவல் துறை டெபுடி இன்ஸ்பெக்டர்-ஜெனரல் பதவித் தரத்தில் காவல் துறை அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். 1976 நவம்பரில், தீண்டாமை ஒழிப்பு வாரம் கொண்டாடப்பட்டது. அதில் ஆளுநரும் அரசு உயர் அதிகாரிகளும் பங்கேற்றனர். அச்சமயம் இச்சட்டத்தின் முக்கிய அம்சங்களைப் பொது மக்களுக்கு விளக்கிக் கூற சுவரொட்டிகளும் கையேடுகளும் வெளியிடப்பட்டன.

தீண்டாமைப் பழக்கத்தை ஒழிப்பதற்காக, தீண்டாமை ஒழிப்புச் சட்டம் (தற்போது குடியுரிமைகள் பாதுகாப்புச் சட்டம் எனப்படுவது) எந்த அளவுக்குச் செயல்படுத்தப்படுகிறது என்பதை ஆய்வு செய்ய வட்ட, மாவட்ட (சென்னை மாவட்டம் நீங்கலாக) அளவில் அரிசன நல வாரியங்களை அரசு அமைத்துள்ளது. வட்ட அரிசன நல வாரிய உறுப்பினர் தங்களுக்குத் தெரிந்து நடந்திருக்கக் கூடிய தீண்டாமைக் குற்றத்தை அல்லது பாதிக்கப்பட்டவர்கள் முறையீடு செய்து கொள்ளும்போது சாத்தியமான உண்மைகளைக் கண்டறிந்த பிறகு, அதைக் காவல் துறையினரின் நாட்டத்திற்குக் கொண்டு வரலாம். மேலும் தீண்டாமைக் குற்றத்தை ஒழிப்பதற்கென்று ஏற்படுத்தப்பட்ட ரோந்துக் காவல் படையினர் 1972ல் செயல்படத் தொடங்கினர். அக்காவல் படையினர் 30-9-1976 வரை 5,393 வழக்குகள் பதிவு செய்து உள்ளனர். அவற்றில் 3,427 வழக்குகளில் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தீண்டாமையை விரைவில் ஒழிக்கத் தூய்மையும் துப்புரவும் பெரிதும் துணைபுரிவதால், ஒவ்வொரு வட்டத்திலும் மிகவும் தூய்மையாகப் பராமரிக்கப்பட்டு வரும் அரிசனக் குடியிருப்பு ஒவ்வொன்றுக்கும், வானொலிப் பெட்டி

**தமிழகத்தில் தீண்டாமை ஒழிகிறது என்பதற்கோர் எடுத்துக் காட்டு இது !**



வழங்கப்படும். இதற்கென 1977-78-ஆம் ஆண்டில் 0.52 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை மாவட்டம் நீங்கலாக) தீண்டாமையை ஒழிக்கப் பாடுபடும் இரண்டு கிராமங்களுக்கு 2 பரிசுகள் வழங்கப்படுகின்றன. முதல் பரிசின் மதிப்பு 1,000 ரூபாயும், இரண்டாவது பரிசின் மதிப்பு 500 ரூபாயும் ஆகும். இதற்கென 1977-78-ஆம் ஆண்டில் 0.21 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வோராண்டும் ஜனவரி 24-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரை அரிசன வாரம் கொண்டாடப்படுகிறது. இந்த அரிசன வாரத்தில் தீண்டாமை ஒழிப்புக் குறித்து மக்களின் கவனத்தை ஈர்க்க மாநிலம் முழுவதும் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன.

## கலப்புத் திருமணங்கள்

சாதி, சமய வேறுபாடற்ற சமுதாயம் ஒன்றை உருவாக்கும் முயற்சியை ஊக்குவிக்கும் ஒரு நடவடிக்கையாகக் கலப்புத் திருமணங்கள் செய்து கொண்ட தம்பதிகளுக்குத் தங்கப் பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கும் திட்டம் 1968-69ல் தொடங்கப்பட்டது. தற்போது, கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதிகள் கீழ்க்காணும் பரிசுகளும் சலுகைகளும் பெற உரிமையுண்டு :—

(1) 1.5 சவரன் (14 காரட்) மதிப்புள்ள தங்கப் பதக்கமும் பாராட்டுச் சான்றிதழும்.

(2) அரிசனங்களுக்கென்று கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் மூன்று சென்ட் பரப்பு உள்ள வீட்டு மனை ஒப்படை செய்தல்.

(3) 200 ரூபாய் ரொக்கப் பரிசு.

(4) கலப்புத் திருமணம் செய்து கொண்ட பெற்ரோர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அப்பெற்ரோர்கள் அறிவிக்கின்ற உறுதி மொழிக்கு ஏற்ப, தந்தையின் சாதியைச் சார்ந்தவர்களாகவோ தாயின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாகச் செய்யப்படும் அறிவிப்பே எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும்.

(5) இத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, 1977, மார்ச்சு வரை 573 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

(6) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்-குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலமாக கைத்திறப் பணியாளர்க்கான மனைகள்-வீடுகள் வாங்குவதற்கென 1,200 ரூபாய் ஒரு மொத்த மானியம் பெறவும் கலப்பு மணத் தம்பதிகளுக்குத் தகுதியுண்டு. மாதம் 250 ரூபாய்க்குக் குறைந்த வருமானமுள்ள கலப்புமணத் தம்பதிகளுக்குத் தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் 10 வீடுகளைத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் ஒதுக்கித் தரும். இதற்கென 1977-78ஆம் ஆண்டில் 2.00 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

## பழங்குடி மக்கள் நல்வாழ்வுக்கான சிறப்புத் திட்டம்

இம் மாநிலத்தில் 3.11 இலட்சம் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் பரவலாகச் சிதறி இருக்கின்றனர்.

தமிழ் நாட்டில் பழங்குடி மக்கள் தொடர்பான புள்ளி விவரங்கள் திரட்டவும் ஏனைய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளவும் ஆராய்ச்சிப் பிரிவு ஒன்றை அரசு ஏற்படுத்தியுள்ளது. பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கான துணைத் திட்டத்தின் கீழ், திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதில் கண்டுள்ள முன்னேற்றத்தையும் இப் பிரிவு கண்காணித்து அதைப் பழங்குடி மக்கள் மேம்பாட்டு அதிகார மன்றத்துக்குத் தெரியப்படுத்தும். ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், தமிழ்நாட்டிலுள்ள பழங்குடி மக்கள் மேம்பாட்டுக்கென 842.54 இலட்சம் ரூபாய் செலவில் துணைத் திட்டம் ஒன்றை ஆராய்ச்சிப் பிரிவு வகுத்துள்ளது. தெரிந்தெடுக்கப்பட்ட 9 பகுதிகளுக்கென திட்ட அறிக்கைகள் தயாரிப்பதில், ஆராய்ச்சிப் பிரிவும் துணைத் திட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒருங்கிணைந்து செயல்பட்டனர். ஆதிவாசிகளுக்கெனத் திட்ட அறிக்கை தயாரிப்பதில், இந்த ஆராய்ச்சிப் பிரிவு ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறது. இந்த ஆராய்ச்சிப் பிரிவு, தமிழ்நாட்டில் பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் கடன் சுமை பற்றிய விரைவு ஆய்வு ஒன்றை நடத்தி முடித்துள்ளது. பழங்குடி மக்கள் வாழும் பகுதிகளில் நிலம், நிலப் பராதீனம் குறித்து மற்ெருரு அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்., அவர்களின் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் பரிவுரையின் மேல், தமிழ்நாடு பழங்குடி மக்கள் மேம்பாட்டு அதிகார மன்றத்தை அரசு நிறுவியுள்ளது. இந்த அதிகார மன்றம், பழங்குடி மக்களின் நலனுக்காகத் திட்டங்களை வகுத்து, ஒருங்கிணைத்து மேற்பார்வையிட்டுச் செயல்படுத்துகிறது. அரசின் இரண்டாவது செயலாளர் இந்த அதிகார மன்றத்தின் தலைவர் ஆவார். இந்த அதிகார மன்றம், இந்த நிதியாண்டில், இது வரை இரண்டு முறை கூடி, திட்டங்கள் செயல்படுத்தப்படுவதை ஆய்வு செய்துள்ளது.

பழங்குடி மக்கள் துணைத் திட்டத்தின் கீழ் 1977-78ஆம் ஆண்டில் 153 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாருகத் தமிழ்நாடு அரிசன, பழங்குடி மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஏனைய மக்களின் வாழ்க்கை நிலைக்கு உயர்த்துவதற்கான எல்லா நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது.

[சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட அரிசன-நலத் துறைக் கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]

# படச்செய்தி



தமிழ்நாடு அரசின் செய்தி-மக்கள் தொடர்புத் துறையால் 11—9—1977 அன்று, சென்னை கலைவாணர் அரங்கில் நடத்தப் பெற்ற மகா கவி பாரதியார் விழாவை, தமிழ்நாடு சட்ட மன்ற மேலவையின் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்.

சென்னை கலைவாணர் அரங்கில் 11—9—1977 அன்று நடைபெற்ற மகா கவி பாரதியார் விழாவில், மாண்புமிகு தமிழக நிதி அமைச்சர் திரு. கி. மனோகரன் அவர்கள் சிறப்புரை யாற்றியதுடன், சென்னை நகரக் கல்லூரிகள், பள்ளிகள் ஆகியவற்றின் மாணவர்களுக் கிடையே பாரதியாரைப் பற்றி நடத்திய கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினார்.








அயல் நாடுகளிலிருந்து வந்த 60 சுற்றுலா எழுத்தாளர்களின் நன்மைக்காக, சென்னையில் உள்ள தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் 14—9—1977 அன்று ''தென்னகம் நோக்கி'' என்ற கருத்தரங்கு நடத்தப் பெற்றது. இக் கருத்தரங்கை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் துவக்கி வைத்தார். மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் இக்கருத்தரங்கிற்குத் தலைமை வகித்தார்.

சென்னை பிராட்வேயில், மண்ணடிப் பகுதியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காவலர் குடியிருப்பை, அக்குடியிருப்பைக் கட்டிய கொத்தனார்களில் ஒருவரான திரு வேலப்பன் அவர்கள் 14—9—1977 அன்று திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் அவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.







பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை இந்த ஆண்டில்தான் முதன் முதலாக தமிழ்நாடு அரசே சீரும் சிறப்புமாக இரண்டு நாள் கொண்டாடியது. மேதகு தமிழக ஆளுநர் திரு பிரபுதாஸ் பட்வாரி அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை 15—9—1977 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் துவக்கி வைத்து, பேரறிஞர் அண்ணா அவர்களுக்குப் புகழ்மாலை சூட்டிச் சிறப்புரையாற்றினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களும், மாண்புமிகு தமிழக செய்தி-சுற்றுலா அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்களும் அவ்விழாவில் கலந்து கொண்டனர்.



சென்னை இராஜாஜி மண்டபத்தில் 15-9-1977 அன்று நடைபெற்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் 69-வது பிறந்த நாள் விழாவில், மாண்புமிகு தமிழக சமூக நலத் துறை அமைச்சர் செல்வி பி. டி. சரஸ்வதி அவர்கள் உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள், கருவிகள், புத்தாடைகள் முதலியவற்றை வழங்கினார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் சிறப்பாகப் பணியாற்றிய காவல் துறையினருக்குத் தமிழக முதல்வரின் விருதுகள் வழங்கும் விழா 15—9—1977 அன்று, சென்னை இராஜரத்தினம் விளையாட்டரங்கில் நடைபெற்றது. அவ்விழாவில் தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் விருதுகளை அணிவித்துப் பரிசுகளை வழங்கினார்.



ஸ்ரீலங்காவிலுள்ள இந்திய உயர் ஆணையாளர் திரு குர்பசன் சிங் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்களை 15—9—1977 அன்று தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் 69-வது பிறந்தநாள் விழாவினை யொட்டி, 'அண்ணா' பற்றிய தமிழ்க் கவிதைப் போட்டியொன்று மாநில அளவில் ஏற்பாடு செய்யப்பட்டது. வெற்றி பெற்ற கவிஞர்களுக்குரிய பரிசுகளை 16-9-1977 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தின் முன்னால் உள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார்.



தமிழ்நாடு அரசு கொண்டாடிய பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவை யொட்டி சென்னை இராஜாஜி மண்டபத்தில் 16—9—1977 அன்று மாலை 'துறைதோறும் அண்ணா' என்ற தலைப்பில் கருத்தரங்கு ஒன்று நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அக்கருத்தரங்கின் முடிவில் மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் உரையாற்றினார்.





சென்னை இராஜாஜி மண்டபத்தில் 18—9—'77
அன்று நடைபெற்ற அனைத்திந்திய மது
விலக்கு மாநாட்டிற்கு வருகை தந்த மாண்பு
மிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு
ஜெகஜீவன்ராம் அவர்களை மாண்புமிகு
தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர்.
அவர்கள் வரவேற்றார்.

அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டில்
மாண்புமிகு தமிழக முதல்வர் திரு எம். ஜி.
ஆர். அவர்கள் 18—9—1977 அன்று உரை
யாற்றினார்.



அனைத்திந்திய அரிசன—மலைவாழ் பழங்
குடி—சிறுபான்மை இன அலுவலர் நலச்
சங்கத்தின் தமிழ்நாடு கிளை சார்பாக சென்னை
யில், தர்ம பிரகாஷ் மண்டபத்தில் 18—9—'77
அன்று நடைபெற்ற மாநாட்டை மேதகு
தமிழக ஆளுநர் திரு பிரபு தாஸ் பட்வாரி
அவர்கள் துவக்கி வைத்து உரையாற்றினார்.
கேரள மாநில ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள
திருமதி ஜோதி வெங்கடாசலம் அவர்கள்
அம்மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார்.
மாண்புமிகு இந்தியப் பாதுகாப்பு அமைச்சர்
திரு ஜெகஜீவன்ராம் அவர்கள் அம்மாநாட்
டில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.





தமிழகத்திற்கு 21—9—1977 அன்று வருகை தந்த மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்களை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாலையணிவித்து வரவேற்றார்.

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் சென்னை லாயிட்ஸ் சாலையில் 22—9—1977 அன்று கிராமோத்யோக் பவனைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.



சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி பட்டதாரிகள் வரவேற்பு விழா, அக்கல்லூரியின் அரங்கில் 22—9—1977 அன்று நடைபெற்றது. அவ்விழாவை யொட்டி மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் நினைவுப் பலகையைத் திறந்து வைத்ததுடன், சிறந்த மாணவர்களுக்குப் பரிசு வழங்கினார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அவ்விழாவிற்குத் தலைமை தாங்கினார். மாண்புமிகு இந்திய எரிபொருள் அமைச்சர் திரு பா. ராமச்சந்திரன் அவர்கள் விழாச் சிறப்பு மலரை வெளியிட்டார்.







மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள், இராஜா அண்ணமலை புரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காவலர் குடியிருப்பை 21—9—1977 அன்று திறந்து வைத்து உரையாற்றினர். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் அவ்விழாவிற்குத் தலைமை தாங்கினர்.

சென்னை சிறுமலர் (லிட்டில் ஃப்ளவர்) 'கான் வென்ட்' பள்ளியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள தொழில் நுட்பப் பிரிவை 21—9—'77 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் முன்னிலையில், மேதகு தமிழக ஆளுநர் தலைமையில், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

சென்னை காந்தி மண்டபத்தில் 22—9—1977 அன்று, இந்தியாவை ஒன்றுபடுத்திய இரும்பு மனிதர் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களின் திருவுருவப் படத்தையும், சமுதாய, பொருளாதார ஆராய்ச்சிக்கான சர்தார் பட்டேல் மையத்தையும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அவர்கள் திறந்து வைத்து உரையாற்றினர்.







நாவல் மன்னர் சரத் சந்திர சட்டர்ஜி அவர்களின் நூற்றாண்டு விழா 23—9—1977 அன்று, கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மாண்புமிகு இந்தியக் கல்வி அமைச்சர் டாக்டர் பி. சி. சுந்தர் அவர்கள் சரத் சந்திரரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து உரையாற்றினார். அவ்விழாவிற்கு மாண்புமிகு தமிழக செய்தி—சுற்றுலாத் துறை அமைச்சர் திரு ஆர். எம். வீரப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். அவ்விழாவில் சரத் சந்திரரின் நாவல்களைத் தமிழாக்கம் செய்து தமிழகத்தில் பரப்பிய திரு அ. கி. ஜயராமன் அவர்களுக்கும், திரு த. நா. குமாரஸ்வாமி அவர்களுக்கும் பொன்னாடை போர்த்தப்பட்டது.





மாண்புமிகு இந்திய அரசின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் திரு சமரேந்திர குண்டு அவர்கள் 23—9—1977 அன்று மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்களைத் தலைமைச் செயலகத்தில் சந்தித்து உரையாடினார்.




சென்னை இராஜாஜி மண்டபத்தில் 26—9—'77 அன்று, சிறு சேமிப்பு இயக்ககத்தின் சார்பில் நடத்தப் பெற்ற சிறப்பு விழாவில், மாண்புமிகு இந்திய அரசின் இராஜாங்க நிதியமைச்சர் திரு ஷுல்பிகுருல்லா அவர்கள் 'தேசிய வளர்ச்சிப் பத்திரங்கள்' பற்றிச் சிறப்புரையாற்றினார். அவ்விழாவிற்கு தமிழ்நாடு சிறு சேமிப்பு அறிவுரை வாரியத்தின் துணைத் தலைவர் இலட்சிய நடிகர் திரு எஸ். எஸ். இராஜேந்திரன் அவர்கள் தலைமை தாங்கினார்.

# மதுவைப்பற்றி மகாத்மா

''என்னை ஒரு மணி நேரத்திற்கு இந்தியாவின் சர்வாதிகாரியாக நியமித்தால் நான் முதல் காரியமாக கள் சாராயக் கடைகள் அனைத்தையும் நஷ்ட ஈடு தராமலேயே மூடி விடுவேன்.''

''குடிகாரனுக்குத் தாய்க்கும் தங்கைக்கும், தாரத்திற்கும் வேறுபாடு தெரியாமல் போய் விடுகிறது.''

''கஞ்சாவும், கள், சாராயமும் சைத்தானின் இரு கைகள்.''

''மலேரியா முதலிய நோய்கள் உடலை மட்டுமே பாதிக்கும்; மது பானங்களும் கஞ்சாவும் உடலோடு ஆன்மாவையும் பாதிக்கும்.''

''குடிப்பழக்கம் காரணமாக சாம்ராஜ்யங்களே அழிந்து போனதாக வரலாறு கூறுகிறது.''

''தீயும் வெள்ளமும் உடலை மட்டுமே அழிக்கும். கள்ளும், சாராயமும் ஆன்மாவையும் அழிக்கும்.''

''கள்-சாராயமும், கஞ்சாவும் அவற்றை உபயோகித்துப் பழகியவரின் நடத்தையை முற்றிலும் கெடுத்து விடுகின்றன.''

''குடித்து விட்டால் அவர்களுக்குத் தம்மை அடக்கிக் கொள்ளவே முடியாமற் போய்விடும்''.

''சுருங்கக் கூறுமிடத்துச் சாராயம் நம் உடலையும், நடத்தையையும் அறிவையும் பாழாக்குகிறது''



''களவையும் ஒழுக்கமற்ற செயல்களையும் புரிவதை விட மிகப் பெரிய பெரிய பாதகமானது வேறெதுவுமில்லை. இவ்விரு மாபாதகத்திற்கும் கள் சாப்பிடுவதே தந்தை போன்றது''.

''பெரும்பாலும் குடிகாரர்களே திருடவும் விபசாரம் செய்யவும் தொடங்குவதைப் பார்த்ததில்லையா?''

''நம்மிடையே ஆயிரக் கணக்கில் குடிகாரர்கள் இருப்பதைவிட இந் நாடு ஓட்டாண்டியாய் இருப்பதே எனக்குச் சம்மதம்.''

''மக்களின் துர்ப் பழக்கங்களை நீடிக்க விட்டுக் கொண்டிருக்கும் கடமை அரசாங்கத்திற்குக் கிடையாது.''

கள்ளரக்கன் கையில் சிக்கியுள்ள நாடு அழிந்து போவது தவிர வேறு வழியில்லை.

''உரோம சாம்ராஜ்யம் வீழ்ச்சியுற்றதற்கான காரணங்கள் பலவற்றுள் இந்தக் குடிப்பழக்கம் அந்த நாட்டு மக்களுக்கு இருந்ததும் ஒன்று என்பதில் சந்தேகமில்லை''.

''திருடுவதையும் விபசாரம் செய்வதையும்விட, கள் குடிப்பதை நான் பெரிய குற்றமாகக் கருதுகிறேன்''.

''கலால் வருமானத்தைத் துறந்து கள்ளுக் கடைகளை மூடிவிடுவதில் நாட்டோடு ஒத்துழைக்குமாறு அழைக்கிறேன்.''

''பல சுதேச மன்னர்களை இக் குடிப் பேய் ஏற்கெனவே அழித்தும் இப்பொழுது அழித்துக் கொண்டும் இருக்கிறது.''

''சாராயப் பழக்கம் காரணமாகத் தொழிலாளர்கள் அவல நிலையில் இருந்து வருகிறார்கள்.''

# அந்த நாள் என்று வருமோ !

—மகாத்மா காந்தி.

எவனும் தன் பிறவியினுலோ, சடங்குகள் சிலவற்றைச் செய்வதனுலோ, தன்னை உயர்ந் தவனுக ஆக்கிக் கொள்ளவோ, இன்னெரு வனைத் தாழ்ந்தவன் என்று சொல்லவோ முடியாது. குணமும் நடத்தையுமே ஒருவனு டைய சாதி எது என்பதைத் தீர்மானிக்கும். கடவுள் எவரையும் பிறக்கும்போது, நெற்றியில், உயர்ந்தவன் அல்லது தாழ்ந்தவன் என்பதைக் குறிக்கும் பட்டையோடு அனுப்பவில்லை. ஆகையால் ஒருவன் தன் பிறப்பினுல் உயர்ந்தோ—தாழ்ந்தோ விடுகிறுன் என்னும் சாஸ்திரத்தை மதிப்பதற்கில்லை; அவ்வாறு கூறுவது கடவுளையே மறுப்பதாகும்; கடவு ளின் மறு பெயரான சத்தியத்தை மீறுவ தாகும்.

மிகவும் தூய இந்து மதத்தில் ஒரு பிராம மணனும், ஓர் எறும்பும், ஒரு யானையும், நாயை அடித்துத் தின்பவனும் சரிசமம் என்று கருதப்பட்டிருக்கிறது. நமது தத்துவம் இவ்வளவு உயர்ந்த கருத்தைப் போதித்தும், நாம் அதன்படி நடக்கத் தவறியதனுலேயே, இந்தத் தத்துவம் நமது வெறுப்புக்குக் காரண மாக ஆகிவிட்டது. இந்து மதம் மனிதர்களை மட்டும் அல்லாது எல்லா உயிர்களையும் சகோ தரர்களாக பாவிக்குமாறு வற்புறுத்துகிறது. இதைக் கேட்கையிலேயே நமக்குத் தலை சுற்றினுலும், இதை அனுஷ்டிக்க இயன்ற வரையில் முயல வேண்டும்.

**மனிதர் எல்லோரும் சமமானவர் என்பதை ஏற்று அதன்படி நடக்கத் தொடங்கினுல், நம்மால் எல்லா உயிர் களுடனும் சம உறவு கொண்டுவிட முடியும். அந்த நன்னுள் என்று வரு கிறதோ அன்று உலகில் அமைதி நிலவும்; எல்லோரும் அண்ணன் தம்பிகளைப் போல் வாழ்வார்கள்!-**

சர்வோதய வெளியீடான
''சாதிகள் ஒழியட்டும்''
என்னும் நூலிலிருந்து.....

*''ஒருவன் தன் காம இச்சையைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கத்திடம் விலை மாதருக்கு ஏற்பாடு கோருவதில் உள்ள நியாயம்தான், ஒருவன், கள் சாராயம் அருந்த வசதி செய்து தருமாறு கோருவதிலும் இருக்கிறது.''*

*''மதுபானப் பழக்கமுடையவர்களைக் கேளுங்கள், மதுவின் கொடுமை தெரியவரும்.''*

*''குடிப்பழக்கம் இங்கிருந்து நீங்குவதற்கு நம் சமூக ஊழியர்களும் முக்கியமாய்ப் பெண்கள் அனைவரும் மிகவும் பாடுபட்டு உழைக்க வேண்டும்.''*

*''கள் சாராயத்தை அறவே ஒழித்துக் கட்டினுலன்றி, அதன் பிடிப்பில் சிக்கியுள்ளவர்களைக் காக்க முடியாது.''*

*''கள் சாராயம் இலேசானதல்ல. நல்ல வார்த்தை சொல்லியோ தயை தாட்சண்யம் காட்டியோ இக் கொடிய தீமையைச் சமாளிக்கலாம் என்பது நடவாத காரியம்.''*

*''போதைப் பொருள்களின் முழு ஒழிப்பிற்காகச் சூறுவளிப் பிரச்சாரம் செய்வதைப் புனித மான கடமையாகக் கொள்வீர்களாக!''*

*''மதுவை அகற்றுவதற்கு டாக்டர்களும், வைத்தியர்களும் உருவான வகையில் உதவக்கூடும். இந்தச் சீர்திருத்தம் செய்வதில் பெண்களுக்கும் மாணவர்களுக்கும் பிரத்யேகமான உரிமை உண்டு.''*



# கிராம சுயராஜ்யம்

**— மகாத்மா காந்தி**

நான் கிரர்ம சுயராஜ்ய்மென்று சொல்வது ஒரு முழுக் குடியரசாகும். அது தன் அடிப்படைத் தேவைகளுக்கு தானே ஏற்பாடு செய்து கொண்டும், பிறரிடமிருந்தே கிடைக்கக்கூடிய பல விஷயங்களில் ஒன்றிற்கொன்று உதவிக் கொண்டும், உதவி பெற்றுக் கொண்டும் இருக்கும். எனவே, ஒவ்வொரு கிராமமும் முதல் வேலையாக தன் உணவுக்கு வேண்டிய தானியங்களையும், ஆடைக்கு வேண்டிய பருத்தியையும் தானே விளைவித்துக் கொள்ளும். ஒவ்வொரு கிராமத்திலும் கால்நடைகளுக்கு மேய்ச்சற் புலமும், பெரியவர்களும் குழந்தைகளும் ஓடியாடி விளையாடத் திறந்த வெளிகளும் இருக்கும்; இன்னும் நிலமிருந்தால் அதில் கஞ்சா, புகையிலை, அபின் போன்றவையல்லாத உபயோகமான வாணிபப் பொருள்களையும் விளைவிக்கும். கிராமத்தில் ஒரு நாடக அரங்கும், பொது மண்டபமும், பள்ளியும் இருக்கும். தட்டுப்பாடு இன்றித் தண்ணீர் கிடைத்து வருவதற்கு வேண்டிய நீர் வசதியிருக்கும் : கிணறுகளுக்கும், குளங்களுக்கும் காவல் போட்டு இதை ஏற்பாடு செய்து கொள்ளலாம். இறுதி ஆதாரக் கல்வி வகுப்பு வரை எல்லா ஆண்-பெண் பிள்ளைகளுக்கும், கல்வி கட்டாயமிருக்கும்.

காரியங்களெல்லாம் கூடியவரை கூட்டுறவு முறையிலேயே நடத்தப்பெறும். இப்பொழுது போல் தரவாரியான தீண்டாமையுள்ள சாதிப் பிரிவினைகள் இரா. கிராம சமூகத்தின் கையிலுள்ள ஆயுதம் சத்தியாக்கிரகம், ஒத்துழையாமை ஆகிய முறைகளில் அமைந்த அகிம்சையே. கட்டாயச் சேவைக்கென அமைந்துள்ள பட்டியலிலிருந்து வரிசைக் கிரமமாகக் குழுக்களைத் தேர்ந்து, அவற்றினிடம் கிராமப் பாதுகாப்புப் பொறுப்பு ஒப்புவிக்கப்படும். கிராம நிர்வாகம் ஐந்து பேர் கொண்ட பஞ்சாயத்தினால் நடத்தப்படும். இவைகளுக்குத் தேவையான எல்லா அதிகாரங்களும் ஆதிக்கமும் இருக்கும்.

அண்டை அயல் கிர்ாமங்களுடனும், இருந்தால் மத்திய அரசாங்கத்துடனும் இந்த சுயாட்சிக் கிராமங்களுக்கு இருக்க வேண்டிய உறவு குறித்து நான் இங்கே ஆராயவில்லை. என் நோக்கம் மேலெழுந்தவாரியான கிராம ராஜ்யத் திட்டமொன்று வகுத்துத் தருதலே. இங்கே தனி மனித சுதந்திரத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு ஜனநாயகம் நிலவும். ஒவ்வொரு மனிதனும் தன் அரசாங்கத்தை அமைத்து நடத்துவதில் பங்கு கொள்வான். அகிம்சையின் சட்ட திட்டங்கள் அவனையும் அவனது அரசாங்கத்தையும் இயக்கும். உலகமே திரண்டு வந்து தாக்கினும் அவனும் சமாளித்துக் கொள்வான். அவன் கிராமமும் சமாளித்துக் கொள்ளும். தன்மானத்தையும், கிராமத்தின் பெயரையும் பாதுகாக்கும் முயற்சியில் தன் உயிரையும் பலியிடத் தயங்க மாட்டானாகையால் இதில் அவனுக்குச் சிரமமே இராது.

நான் இங்கே குறித்துள்ளவைகளுள் நடைபெற முடியாதவை என்று எதையும் சொல்ல முடியாது. இம்மாதிரியான கிராமமொன்றை உருவாக்குவதற்கும் ஓர் ஆயுட்காலமே ஆனாலும் ஆகலாம். உண்மை ஜனநாயகத்தில் பற்றும், கிராம வாழ்க்கையில் ஈடுபாடுமுள்ள ஒருவர், ஒரு கிராமத்தைத் தேர்ந்து எடுத்துக் கொண்டு அதை இவ்வகையில் அமைப்பதே தமக்குள்ள வேலை, அதுவே தம் உலகம் என்று கருதிப் பாடுபட்டால் நல்ல பயன் விளையும். அவர் தாமே கிராமத்தில் தோட்டியாகவும், நூற்போனாகவும், காவலாளாகவும், வைத்தியனாகவும், பள்ளி ஆசிரியனாகவும் இருந்து கொண்டு வேலையைத் தொடங்க வேண்டும். எவரும் தம்மை அணுகவோ தமக்கு உதவவோ மறுத்தால், அவர் தோட்டி வேலையையும், நூற்பையும் செய்வதோடு நிறுத்திக் கொள்ளலாம்.

—ஆதாரம் 'கிராம சுயராஜ்யம்'



# மகாத்மாவுக்கு தமிழ் கற்க ஆசை!...

சென்னையில் நடந்த பாரதீய சாகித்திய சம்மேளனத்துக்குக் காந்தியடிகள் தலைமை வகித்தார். மகாமகோபாத்தியாய உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள்தாம் வரவேற்புக் குழுத் தலைவர். ஐயரவர்கள் தமிழில் எழுதிய வரவேற்புரையை இந்தியில் மொழி பெயர்த்துக் காந்தியிடம் அளித்ததுடன் மகாநாட்டிலும் விநியோகித்தார்கள். மகாநாடு துவங்குவதற்கு முன் ஐயரவர்கள், காந்தியைச் சந்திக்கச் சென்றார். காந்தி அவர்களிடம், ஐயர் அவர்களைப் பரஸ்பரம் அறிமுகம் செய்து வைத்தார் ராஜாஜி. காந்தி புன்சிரிப்புடன், " உட்காருங்கள் ஐயா " என்று அழுத்திக் கூறி வரவேற்றார். ஐயரவர்களுடைய அடக்கமும், பேச்சும் காந்தியடிகளைப் பெரிதும் வசீகரித்து விட்டன.

வரவேற்புரையில் ஐயரவர்கள், "காந்தியடிகளின் சமகாலத்தவர்களாக வாழ்வது பாக்கியம் என்று கருதுகிறேன். அவருக்கு அடுத்தபடியாக இருந்து ஒரு விழாவை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வது மிகவும் பெரிய பாக்கியம் என்று மகிழ்ச்சியுறுகிறேன் " என்று குறிப்பிட்டார்கள்.

காந்தியடிகளோ, "அர்த்த புஷ்டியும் இலக்கியச் சுவையும் நிரம்பிய ஐயரவர்களின் வரவேற்புரை என்னைப் பெரிதும் வயப்படுத்தி விட்டது. தமிழர்களுடன் பல வருடகாலம் நான் நெருங்கிப் பழகியிருக்கிறேன். இப்போது ஐயரவர்களுடன் அறிமுகம் ஏற்பட்ட பிறகு, அவருடைய அருகில் அமர்ந்து, அவரிடமே தமிழ்ப்பாடம் கற்கவேண்டும் என்ற ஆசை தோன்றுகிறது. இந்த ஆசைக்கு இடையூறாக வயதும், வேலையும் இல்லை, ஆனால் எங்கள் இருவருக்குமே போதுமான அவகாசம் இல்லையே என்றுதான் வருந்துகிறேன்" என்று தம்முடைய தலைமை உரையில் குறிப்பிட்டார்.

# பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா கவிதைப் போட்டி

தமிழக அரசு முதன்முதலாகப் பேரறிஞர் அண்ணா அவர்களின் 69-வது பிறந்தநாள் விழாவினை 15-9-1977, 16-9-1977 ஆகிய இருநாட்களிலும் சிறப்பாகக் கொண்டாடியது. இந்த விழாவையொட்டி, 'அண்ணா'வைப் பற்றித் தமிழ்க் கவிதைப் போட்டியொன்று மாநில அளவில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தக் கவிதைப் போட்டிக்கு 1879 கவிதைகள், தமிழகத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்து சேர்ந்தன. இந்தக் கவிதைகளைப் படித்துத் தேர்வு செய்வதற்கு,

பேராசிரியர் நா. பாண்டுரங்கன்
டாக்டர் ஔவை நடராசன்
சிலம்பொலி செல்லப்பன்
கவிஞர் புலமைப்பித்தன்
கவிஞர் சாமிபழனியப்பன்
டாக்டர் குமாரவேல்
புலவர் தமிழ்ப்பித்தன் பி.லிட்.

ஆகிய எழுவரைக் கொண்ட நடுவர் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இந்த நடுவர் குழுவினர், போட்டிக்கு வந்த 1879 கவிதைகளையும் படித்துப் பார்த்துப் பரிசுக்குரிய மூன்று கவிதைகளைத் தேர்ந்தெடுத்துக் கொடுத்தனர். அவை,

1. மதுரை மாவட்டம் நத்தத்தைச் சேர்ந்த புலவர் பாலசுப்பிரமணிய வேங்கடராமன் எழுதிய 'அண்ணாவைப் பற்றி எண்மர்' என்ற கவிதையும்,

2. புதுச்சேரி மாநிலம் குயவர்பாளையத்தைச் சேர்ந்த அரிமதி தென்னகன் எழுதிய 'தமிழ் நாயகன்' என்னும் கவிதையும்,

3. சென்னை உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த ஆய்வு மாணவர் திரு கே. மதியழகன் எழுதிய 'நாத்திகத் தெய்வமே' என்னும் கவிதையும் ஆகும்.

இந்த மூன்று கவிதைகளும் முறையே முதலாவது, இரண்டாவது, மூன்றாவது பரிசுகளைப் பெறத் தகுதியுடையனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன. கவிஞர்களுக்குரிய பரிசுகளை 16-9-1977 அன்று சென்னை இராஜாஜி மண்டபத்தின் முன்னால் உள்ள திறந்தவெளி அரங்கில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு எம். ஜி. ஆர். அவர்கள் வழங்கினார்.

பரிசு பெற்ற கவிதைகளை அடுத்த பக்கங்களில் காணலாம்.

பரிசு பெற்ற கவிஞர்களுக்கு எங்கள் பாராட்டுதல்களையும், கவிதைகளைப் படித்துத் தேர்வு செய்து தந்த நடுவர் குழுவிற்கு எங்கள் மனமார்ந்த நன்றியையும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறோம்.

முதற் பரிசுக் கவிதை



# அண்ணாவைப் பற்றி எண்மர்!


—புலவர் பாலசுப்பிரமணிய
வேங்கடராமன்,
தமிழாசிரியர்,
துறைக்கமலம் அரசினர் உயர்பள்ளி,
நத்தம் (624 401)
மதுரை மாவட்டம்.


### 1) அன்புத் தாய்

புத்தனை ஏசு காந்திப் புனிதரைப் பெற்ற வள்நான்!
இத்தரை மீது பன்னுள் எனக்குப்பின் மகவே இன்றிப்
'பித்தி'என் றுலகோர் எள்ளப் பெருந்துயர் எய்துங் காலை
வித்தகன் அண்ணு தோன்றி விழிநீரைத் துடைத்தான் கண்டீர்!

### 2) கலைமகள்

''கற்றதும் கைம்மண் ஒக்கும் கல்லாத துலகை ஒக்கும்''
மற்றுநான் அதனுல் மேலும் கற்றவா றிருக்கப் பல்லோர்
சிற்றெறும் பறிவைப் பெற்றுர் செருக்காட்டம் ஆடப் பன்னூல்
முற்றறக் கற்ற அண்ணு முகம்என்றன் அகங்காட் டிற்றே!

### 3) திருமகள்

எத்தனை வழியில் அன்னுன் இதயத்தைப் பிணிக்கப் பார்த்தேன்!
அத்தனை முறையும் தோல்வி!.....அவன்என்னை வேலை வாங்கி
இத்தரை முழுதும் ஏழைக் குடிசைகள் எல்லாம் சுற்றி
நத்துவாய் பின்னே என்றுன்; நாணிநான் தலைக விழ்ந்தேன்!

### 4) அரசியல் அணங்கு

பொய்நெய்த பொன்னு டைக்குள் வஞ்சகப் பூமா லைக்குள்
மெய்கொன்ற மலர்க்கி ரீட மேனிக்குள் கொஞ்சும் லஞ்சத்
தையலார் தழுவும் வீரத் தலைவரால் தாழ்ந்தேன்: காந்தி
அய்யனே டண்ணு என்னும் மெய்யனுல் வாழ்ந்தேன் கண்டீர்!

### 5) இலக்கியக் காதலி

பற்பல நூற்றுண் டாக பாரத இராம காதைக்
கற்பெருஞ் சிறையில் வாடிக் கையற்றுக் கலங்கி னேனைப்
பொற்புறு பூஞ்சோ லைசூழ் புதியதோர் மாளி கைக்குள்
கைப்பிடித் தணைத்துச் சென்ற காதலர் அண்ணு அன்றோ!

### 6) தமிழ்த்தாய்

வடமொழிப் புளித்த கள்ளும் வகைவகைப் புதுப்பேர் கொண்ட
குடமொழி ஆங்கி லத்துக் குப்பிசேர் நறவுங் கொண்டு
தடமறி யாது சுற்றித் தளர்ந்துவீழ் என்மக் கள்தம்
மடமையை மாற்றப் பெற்றேன் மருந்தினை, அதுதான் அண்ணு!

### 7) சாதிப் பேய்

நான்குபேர் பிறந்தோம் பின்னர் நாற்பது கோடிப் பேராய்
மான்குலம் போலத் துள்ளி மயிலென நடன மிட்டோம்!
ஏன்எனக் கேட்டோர் வீழ்ந்தார்! ஆயினும் ஈரோட் டம்பைத்
தான்தொடுத் தெழுந்தோன் தாளில் தாழ்ந்தனம்; அகன்றோம்; கண்டீர்!

### 8) நீதி தேவன்

நாடகம் ஒன்றுல் என்றன் நரம்பிலே ஊசி போட்டு
நீடிய மயக்கத் தின்பின் நிலைத்துநான் வாழத் தக்க
கேடுதீர் மருந்தும் தந்தான்! கெழுதகை நண்பன் அன்னுன்;
நாடுதான் என்பொன் னுடு! நாமமே எனது நாமம்!

## இரண்டாம் பரிசுக் கவிதை

### தமிழ் நாயகன்

— அரிமதி தென்னகன்,

நேரிசை வெண்பா

ஆழ்கடல்போல் நெஞ்சும், அரிய குறளுருவும்,
வாழ்தமிழோ என்னும் வளவாழ்வும்,—சூழ்பகைமை
வெல்கின்ற புன்னகையும், வீழா வரலாறும்
நல்லறிஞர் அண்ணா நலம் !

வெட்டும் பொறுமையினை வீழ்த்தி, அரசியலில்
நட்பை விளைத்ததமிழ் நாயகரை *வெட்டவெளிக்
கல்லூரி யால்நாட்டைக் காத்தவரைப் போலுலகில்
சொல்லற் குரியவர்யார்? சொல்!

கட்டுரையா ! நாடகம்,கற் கண்டுச் சிறுகதையா !
தொட்டால்,கை வைத்தறியாத் துய்மடலா!—சொட்டும்
கூடாய் எவர்க்கும் கொடுத்த தமிழ்ப்பிள்ளைத் தேன்
கீடானுர் இங்கே எவர் ?

ஏறு புகழ்கொண்ட எம்அண்ணா தந்தனவாம்
† ஆறு படையிருக்க அச்சமில்லை—மாறுபடும்
எந்நெறியும் வெல்ல இயலாதே ! அண்ணாவைச்
சிந்தித்தால் துன்பமில்லை செப்பு !

பொங்கும் கடல்புரட்டிப் போட்டாலும், கட்டுமரம்
எங்கும் கவிழ்தல் இல்லையன்றோ!—எங்குலத்துக்
கோமான் 'அண் ணா'தந்த கொள்கை முனைகவிழ்க்க
ஆமோ? இல்லையென் றறை !

சிங்கந்தான் அண்ணா! சிலிர்த்தெழுவார் செந்தமிழர்
பங்கம் அடையின் ! பதைத்தெழுந்தால்—‡ மங்குல்
தொடர்ந்துவரக் கண்டமயில் தோகைசிலிர்ப் பாக
இடம்பெறுமே நெஞ்சில் இனித்து !

மாற்றுக் கருத்தினையும், மாற்றுரை யும்மதிக்கும்
ஆற்றல் அறமென்னும் அண்ணாவைக்—கூற்றுவனும்
ஏனழைத்துச் சென்றான் ? இனிய அவருளத்தைத்
தானடையக் கொண்டான் தனித்து !

பாகுநிழல் கொண்ட பயன்மரமாய் அண்ணாவின்
ஆகுநெறி எல்லாம் அமைந்தனவாம்!—மேகமென
ஈகைமனத் தாயனையான் ஈந்தநெறிச் செல்வோமேல்
வாகைபல நம்முன் வரும் !

* வெட்டவெளிக்கல்லூரி—பொதுக் கூட்டம்.
† ஆறு படை—1. கடமை, 2. கண்ணியம், 3. கட்டுப்பாடு, 4. கனிவு, 5. துணிவு, 6. பணிவு.
‡ மங்குல்—கரிய மேகம்.



## மூன்றும் பரிசுக் கவிதை

### நாத்திகத் தெய்வமே !

—கே. மதியழகன்,

சரித்திரப் பாலையின் தண்ணீர்ப் பந்தலே !
சாவிலும் கரைந்திடாச் சந்தனச் சிற்பமே !

நற்றமிழ்க் கோயிலின் நாத்திகத் தெய்வமே !
நலிந்தவர் வாழ்க்கையின் நம்பிக்கைப் பாடலே !

பண்பினைப் புகட்டிய பள்ளிக் கூடமே
பணிவிலும் நிமிர்கிற பனித்திரி தீபமே

புயலையே தென்றலாய்ப் புகுத்திய புரட்சியே !
பொறுமையைப் போற்றிய பூகம்ப வாசலே ;

இதயத்து மீன்களின் இனியநல் தூண்டிலே !
ஏசிடும் நெஞ்சையே ஈர்த்திடும் காந்தமே !

அறிவே ! எங்கள் ஆத்மாவின் தாகமே !
அழித்திட முடியா அடிமனக் கனவே !

அறுபது பக்க அற்புதப் புதினமே !
அணிந்துரை வேண்டா அன்னையின் பாசமே !

கபிலப் புலவனின் கடமைப் பயணமே !
கவிதையில் நிலைத்த கலங்கரை விளக்கே !

காஞ்சியில் தோன்றிய காவிய ஞாயிறே !
கல்லறை கொண்டது கண்ணீர்க் கடலிலோ ?

எங்கே ஞாயிறு கிழக்கினில் மூழ்கும் ?
எப்படி யண்ணா இதுசரி யாகும் ?



குழந்தைகளுக்குத் தேவை
சத்தான உணவு
பயிர்களுக்குத் தேவை
விஜய்



குழந்தைகளின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு எல்லாச் சத்துக்களும் அவசியம். அதுபோலவே பயிர்களின் வளர்ச்சிக்குத் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் மூன்றையும் அளித்தால்தான் முழுப் பலனைப் பெறலாம்.

இம் மூன்று சத்துக்களையும் ஒருங்கே கொண்டவை விஜய் காம்ப்ளெக்ஸ் உரங்கள். உங்கள் பயிர்களுக்கும் நிலங்களுக்கும் ஏற்றவாறு சத்துக்களை அளிக்க விஜய் 17-17-17, விஜய் 14-28-14 காம்ப்ளெக்ஸ் ரகங்கள் உங்களுக்கு இப்போது கிடைக்கின்றன. விஜய் உரங்கள் நவீன முறையில் தயாரிக்கப்பட்டு, நன்கு பரிசோதிக்கப்பட்ட தரமான உரங்களாகும்.

தரமான விஜய் உரங்களைத் தயாரிப்பது, இந்தியாவின் மிகப்பெரிய உரத் தொழிற்சாலைகளில் ஒன்றான மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்.

உங்கள் பயிர்களுக்கு விஜய் உரங்களைப் பயன்படுத்தி அதிக விளைச்சலைப் பெறுவதற்கான சாகுபடி முறைகளை அறிய, கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதி, இலவச வெளியீடுகளைப் பெறுங்கள்.

ஏரியா மானேஜர்
மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் லிமிடெட்
5/1 ராமச்சந்திரபுரம், தென்னூர், திருச்சி 620 017

VIJAY
MADRAS FERTILIZERS




MEL-1517

# பஞ்சாயத்து ராஜ்யம்

—மகாத்மா காந்தி

சுதந்திரம் என்பது இந்திய மக்களின் சுதந்திரமேயன்றி, இப்பொழுது அவர்கள் மீது ஆட்சி புரியும் வெள்ளையரின் சுதந்திரமாக இருக்க முடியாது. ஆட்சியாளர் தம் கீழே அடங்கிக் கிடப்போரின் விருப்பத்தை யொட்டி நடந்து கொள்ள வேண்டும். அதாவது அவர்கள் மக்கள் ஏவலைப் புரியக் காத்திருக்கும் ஊழியராயிருக்க வேண்டும்.

சுதந்திரம் அடித்தளத்தில் ஆரம்பமாக வேண்டியது. அதாவது, ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாக, முழு அதிகாரமுள்ள பஞ்சாயத்தாக இருக்கும். அப்படியானால் ஒவ்வொரு கிராமமும் தன் பலங்கொண்டு வாழக்கூடியதாய், உலகமே திரண்டு வந்துத் தாக்கினாலும் தன்னைப் பாதுகாத்துக் கொண்டு, தன் காரியங்களை அனைத்தையும் நிர்வகிக்கக் கூடியதாய் இருக்க வேண்டும். அது வெளித் தாக்குதல் எதையும் எதிர்த்து நின்று, அதிலேயே தான் மடிவதற்கும் சித்தமாயிருக்குமாறு பயிற்றுவிக்கப்பட்டிருக்கும். எனவே, இறுதியில் கிராமத்தில் ஒவ்வொரு மனிதனுமே இவற்றிற்கெல்லாம் பொறுப்பாளியாவன். அப்பொழுது அண்டை அயலில் உள்ளவர்கள் விரும்பியளிக்கும் உதவியையோ, பிறர் தரும் ஆதரவையோ பெறக்கூடாது. அவைகளை நம்பி இருத்தல் சரியல்ல என்பதல்ல. இது கிராம சக்தி, வெளிச் சக்தி ஆகியவை தாமே விரும்பிக் கொடுத்து வாங்கிக் கொள்வதாய் இருந்து வரும். இத்தகைய சமூகம் மிகவும் உயர்ந்த பண்பாடுள்ளதாக இருக்குமென்றும், அதைச் சேர்ந்த ஒவ்வொரு ஆடவனும், மகளும் தம் தேவைகளை உணர்ந்திருப்பார்களென்றும் கொள்ளலாம்; இதுமட்டுமல்ல, ஒரே வகை உழைப்பினால் பிறர் பெற முடியாததை இவர்கள் தாமும் பெற விரும்பமாட்டார்கள்.

இச்சமூகம் இயல்பாகவே சத்திய-அகிம்சையின் அடிப்படையில் அமைந்ததாயிருக்கும். இவ்வாறு இருத்தல் கடவுளிடம் உண்மையான நம்பிக்கை இல்லாத பொழுது சாத்தியமல்ல என்பது என் அபிப்பிராயம். இந்தக் கடவுளென்பது தானேயாய், சர்வ அறிவும் படைத்த சக்தி. அச்சக்தியினுள் உலகம் அறிந்த எல்லாச் சக்திகளும் அடங்கவும், அது தன் சக்திக்கு பிறர் உதவி எதையும் நாடாது. மற்ற எல்லாம் அழிந்தொழிந்து போகும் பொழுதும்தான் இருந்து வரும். இந்த எல்லாமான ஜீவ சக்தியில் நம்பிக்கை கொள்ளாத போது நம் வாழ்வுக்கே காரணமில்லாது போகிறது.

எண்ணிலடங்காத கிராமங்களாலான இந்த அமைப்பு படிப்படியாக மேலே எழுந்ததாயின்றி, ஒரே மட்டத்தில் மேன்மேலும் கீழே பரந்ததாய் இருக்கும். வாழ்க்கை, 'பிரமிட்' கோபுரம் போன்று மேல் கட்டடம் முழுவதையும் அடித்தளம் தாங்க வேண்டிய முறையில் அமையாது, தனி மனிதனை மையமாகக் கொண்டு கடலின் அலை வட்டங்கள் போல் அமைந்திருக்கும். தனி மனிதன் எப்பொழுதும் கிராமத்திற்காகவும், ஒவ்வொரு கிராமமும் தன் வட்டத்தில் அமைந்த பிற கிராமங்களுக்காகவும் தன்னைப்பலியிடச் சித்தமாய் இருப்பான். இவ்வகை முழு அமைப்பும் தனி மனிதர்களால் அமைந்த கட்டுக்கோப்பாய் இருக்க, இம்மனிதர்கள் மிக்க பணிவுடன் நடந்து கொள்வார்களேயன்றி தற்பெருமையினால் சிறிதும் பதட்டமே காட்டமாட்டார்களாகையால், அவர்களாலமைந்த பெரிய சமுதாயத்திற்குள் சிறப்புடன் விளங்குவார்கள்.

ஆகையால் இந்தச் சமுதாயத்தின் வெளி வட்டத்தில் அமைந்தவர்களுக்கு தமக்குள்ளே உள்ளவர்களை அடக்கவோ, அமுக்கவோ அதிகாரமிராது. தாம் மத்தியிலிருந்து வலிவு பெற்றுக் கொண்டுமிருப்பார்கள். 'இதெல்லாம் நடக்கப் போவதா? ஏதோ இலட்சிய உலகம் பற்றி யோசித்துப் பொழுது போக்குவதில் பயனென்ன?' என்று என்னைக் கேட்கலாம். ஆனால் 'யூக்கிலிடின் பிந்துவை' எந்த மனிதனாலும் தன் திறன் கொண்டு வரைய முடியாவிட்டாலும் அதற்கு அழியாத மதிப்பு உண்டென்பது உண்மையானால், மனிதன் வாழ்வதற்கு என் கற்பனைச் சித்திரத்தினாலும் பயனுண்டு. கனவை முழுதும் நனவாக்க முடியாவிடினும் இந்த உண்மை இலட்சியத்திற்காகவே இந்தியா வாழ்வதாக! நாம் விரும்புவது பற்றிய சரியான சித்திரமென்று நம்முன் இருத்தல், சற்றேறக்குறைய அது போன்றே ஒன்றை எய்துவதற்கு அவசியமாகும். என்றேனும் ஒருநாள் இந்தியக் கிராமம் ஒவ்வொன்றும் சுதந்திரக் கிராமங்கள் ஆக வேண்டுமானால் மக்களில் கடையவனும் முதலவனுக்குச் சமமாய், அல்லது முதலவன் கடையவன் என்பதே இன்றி எல்லோருமே சமமாயுள்ள என் கற்பனைச் சித்திரம் கவைக்குதவுவதே என்று நான் நிச்சயமாகச் சொல்வேன்.

இந்த ஏற்பாட்டில் எல்லாச் சமயங்களும் முழு, சம அந்தஸ்துடன் இருந்து வரும். நாமெல்லாரும் ஒரே பிரம்மாண்டமான மரத்தின் இலைகள்; இம்மரத்தின் வேர்கள் பூமியின் அடித்தளம் வரை ஓடியிருப்பதால், இதை எதனாலும், பெரிய புயற்காற்றினாலும்கூட சிறிதும் அசைக்கவோ, ஆட்டவோ முடியாது.

இதில் மனித சக்தியைப் பறித்து ஒரு சிலர் கையில் ஏராளமான ஆற்றலைக் கொணர்ந்து குவிக்க உதவும் இயந்திரங்களுக்கு இடமில்லை. பண்புள்ள இந்த மனித சமூகத்தில் உடலுழைப்பிற்குச் சிறப்பான இடமிருக்கும். இதில் தனி மனிதனுக்கு உதவக் கூடிய இயந்திரம் ஒவ்வொன்றிற்கும் இடமுண்டு. அந்த இயந்திரம் எது என்பது குறித்து நான் இதுவரை ஆரஅமர யோசிக்கவில்லையென்பதை ஒப்புக் கொண்டு விடுகிறேன். 'சிங்கர்' தையல் இயந்திரம் பற்றி எண்ணியதுண்டு; ஆனால் நன்கு யோசித்து முடிவெதற்கும் வரவில்லை. என் கற்பனைச் சித்திரத்திற்கு இது தேவையுமல்ல.

பஞ்சாயத்து ஆட்சிஅமைந்துவிடுகையில் பலாத்காரத்தினால் சாதிக்க முடியாதது, பொது மக்களின் அபிப்பிராயத்தினால் நடந்தேறிவிடும். பொதுமக்கள் தம் ஆற்றலை உணராதிருக்கும் வரைதான், இப்பொழுதைய ஜமீன்தார்கள், முதலாளிகள் மன்னர்கள் ஆகியோரின் ஆதிக்கம் இருக்க முடியும். மக்கள் ஜமீன்தாரி அல்லது முதலாளித்துவத் தீமையுடன் ஒத்துழைக்க மறுத்தவுடனே, அது வலிமையற்றுத் தலை சாய்ந்துவிடும். பஞ்சாயத்து ஆட்சியில் பஞ்சாயத்து ஒன்றுக்குத்தான் எல்லோரும் பணிந்து நடப்பர்; பஞ்சாயத்தோ, தானே வகுத்துக் கொண்டுள்ள விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடந்துவரும்.

—ஆதாரம்: கிராம சுயராஜ்யம்

# நாடு செழிக்கக் காடு வளர்ப்போம்!



மாண்புமிகு உணவமைச்சர்
திரு ஜி. ஆர். எட்மண்ட்



**கா**டுகள் இன்றியமையாத இயற்கை வளங்களைக் கொண்டவை. நாட்டின் பொருள் வளத்திலும் மக்களின் நல்வாழ்விலும் அவை பெரும் பங்கு பெறுகின்றன. மக்களுக்கு இன்றியமையாப் பொருள்களான(தடி)மரம், விறகு, எருத்தழை, (மரம்)பிசின், தோல் பதனிடும் பட்டைகள், எண்ணெய் வகைகள், உண்ணத்தக்க பழங்கள், பருப்புகளையும் மற்றும் வேறு பல பொருள்களையும் காடுகள் வழங்குகின்றன.

காகிதம் ( Paper ), அட்டை ( Board ), மர இழைப் பட்டு ( Rayon ), மரத்தூள் பலகை (Chip Board), தோல் பதனிடும் பொருள், நறுமணப் பொருள் ஆகியவற்றை ஆக்கும் தொழில்களுக்கும், பிற தொழில்களுக்கும் பயன்படும் மூலப் பொருட்களையும் காடுகளே வழங்குகின்றன. இவை வெளிப்படையான பயன்கள். இவை யன்றி, மண் வள சரக் காப்பிலும, தட்ப வெப்ப மிகுதியைத் தணிப்பதிலும், சுற்றுப்புறச் சூழல் தூய்மைக் கேட்டின் விளைவை மட்டுப்படுத்துவதிலும் காடுகளின் பயன்கள் குறிப்பிடத் தக்கனவாம். கண்ணைக் கவரும் வன விலங்குகள் வாழ்விடமும் காடுகள்தாம். எனவே, காடு காத்தலும் மேம்படுத்தலும் தலைமையான இடத்தைப் பெறுகின்றன.

தமிழ்நாட்டில் காட்டின் பரப்பளவு 20,909 சதுர கிலோ மீட்டராகும். இதில் 17,357 சதுர கிலோ மீட்டர் ஒதுக்குக் காடாகவும், எஞ்சிய 3,552 கிலோ மீட்டர் ஒதுக்கு நிலமாகவும் உள்ளது. இம்மாநிலத்தில் 16 விழுக்காட்டு நிலமே காடாக உள்ளது. இது, வகுக்கப்பட்ட தேசிய வனக் கோட்பாட்டின் குறைந்த அளவில் (33.3) பாதியைக்காட்டிலும் குறைவு.

பண்ணைக் காடுகள் (Village Forests), மிகைக் காடுகள் ( Extension Forest ) வளர்ப்புத் திட்டத்தின் கீழும், வறட்சித் தணிப்புத்திட்டத்தின் கீழும் காடுகளுக்கு வெளியே, ஊராட்சி நிலங்களிலும், அரசுப் புறம்போக்கு நிலங்களிலும் காடுகள் பெருமளவில் வளர்க்கப்பட்டுள்ளன. காடுகளின் பரப்பை உயர்த்த ஓரளவுக்கு இவையும் துணை செய்யும்.

காடு சாராத நோக்கங்களுக்கு வனத் துறையைச் சேர்ந்த நிலங்களை விடுவிப்பது இல்லை எனவும் அரசு முடிவு செய்துள்ளது. காடுகளில் மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் உள்ளிட்ட



## வனவிலங்குகள் புகலிடங்கள் !

காடு வாழ் விலங்குகளைப் பாதுகாப்பதிலும் - வளர்ப்பதிலும் விலங்குகள் புகலிடங்கள் இன்றியமையாப் பங்குபெறுகின்றன. இப்புகலிடங்கள் சுற்றுலாப்பயணிகளைப் பெரிதும் கவர்கின்றன.

தமிழ்நாட்டில் ஐந்தாவது திட்டக்காலத்தில் விலங்குகள் புகலிடங்களுக்காக ரூபாய் 20·00 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977—78-ல் இப்புகலிடங்களில் உள்ள சாலைகளை மேம்படுத்தவும், உள் பகுதியில் பணிபுரிகின்றவர்களுக்குக் குடியிருப்புகள், அலுவலகங்கள் கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. கிண்டி குழந்தைகள் பூங்கா, வேலூருக்கு அண்மையில் உள்ள அமிர்தி பூங்கா, முதலைப் பண்ணை அமைத்துப் பாதுகாத்தல், விலங்குகள் வாழ் சூழலை மேம்படுத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். இப்பணிகளுக்காக ரூ. 12·86 இலட்சம் செலவிடப்படும்.

மாநிலத் திட்டங்களுக்கு 1977-78-ல் திட்டமிடப்பட்டுள்ள செலவீடு ரூ. 285.95 இலட்சம். 1977-78ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு ஆதரவுத் திட்டங்கள் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ள செலவீடு ரூ. 79.78 இலட்சம் ஆகும். முதலீட்டிற்கும் விளைபயனுக்கும் இடையே நீண்ட காலத்தை உடையது காடு வளர்ப்பு என்றாலும், முந்தைய ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பயன் தரத் தொடங்கி, மாநிலத்தின் தொழில் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத் தக்க பங்கு ஆற்றியுள்ளன.

**"ஜாகீர் காடுகள்":**

தென்னார்க்காடு மாவட்ட ஜாகீர்கள் வழக்கைத் திரும்பப் பெற்றுக் கொண்டவுடன் சுமார் 1,00,000 எக்டேர் ஜாகீர் காடுகளை 1976 ஆகஸ்டு மாதத்தில் அரசு எடுத்துக் கொண்டது. இந்த ஜாகீரில் பெரும் பகுதி காடாகும். ஓர் உதவி வனப் பாதுகாவலர், சார் நிலை அலுவலர் அடங்கிய சிறிய பணித் தொகுதிக்கு ஒப்பு அளிக்கப்பட்டுள்ளது. காடுகளைக் காக்கும் பணிகளைச் செய்வதுடன் எல்லைகளை வரையறுக்கும் பணியையும் அவர்கள் மேற்கொண்டுள்ளனர். இவைகள் ஒதுக்குக் காடுகளாகப் பின்னர் அறிவிக்கப்படும்.

## நீலகிரியில் தேயிலை வளர்த்தல்...

நீலகிரி மாவட்டத்தில் 89 இலட்சம் ரூபாய் செலவில் 300 எக்டேர் பரப்பில் தேயிலை வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கம். 1977—78-ல் 21.72 இலட்சம் ரூபாய் செலவில் 130 எக்டேர் பரப்பில் தேயிலை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



**பழங்குடியினர் வளர்ச்சி:**

தமிழ்நாட்டில் பழங்குடியினர் தொகை 2 இலட்சமாகும். அவர்கள் காடுகளில் வாழ்கின்றனர். அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு வனத் துறை பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அவர்கள் வேளாண்மை செய்வதற்காக, குத்தகைக்கு நிலம் வழங்கப்பட்டுள்ளது. வனத் துறையின் தோட்டங்களில் ஊடு பயிரிடும் 'குமரி' முறையை மேற்கொள்ளவும் அவர்கள் தூண்டப்பட்டுள்ளனர். அவர்களது வேளாண்மைக்கு வேண்டிய பொருள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவர்களுடைய கால்நடைகள் இலவசமாக மேய விடப்படுகின்றன. காடு பணிகளிலும் அவர்கள் அமர்த்தப்படுகின்றனர். சிலர் பணியாளர்களாகவும், பாகர்களாகவும் அமர்த்தப்பட்டுள்ளனர்.

பழங்குடியினர்களின் குழந்தைகளுக்காக வட ஆர்க்காடு, கோவை மாவட்டங்களில் வனத் துறை பள்ளிக்கூடங்களை நடத்துகின்றது. 12 துவக்கப் பள்ளிகளும், ஒரு நடுநிலைப் பள்ளியும், ஓர் உயர்நிலைப்பள்ளியும் உள்ளன. பிள்ளைகளுக்கு நண்பகல் உணவும், பாட நூல்களும், எழுதப் பலகைகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன. சிலபள்ளிகளில் உணவுச் சாலைகளும் உள்ளன. பழங்குடியினர் நன்மைக்காக 19 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



**வனத் திட்டங்கள்**

வனத் திட்டமிடலே காடுகள் நிர்வாகத்தின் அடிப்படையாகும். வனத் திட்டமிடும் இப்பணிக்கு ஆக ஐந்தாவது ஐந்தாண்டுக் காலச் செலவீட்டின் மதிப்பு ரூ. 5 இலட்சம். 1977-78-ஆம் ஆண்டிற்கு 0.36 இலட்சம் குறியீடாக வைக்கப்பட்டுள்ளது.

**வன இயல் ஆய்வும் கல்வியும்**

காடு வளர்ப்புக் கலை, மரபியல் ஆய்வு, மண்ணியலாய்வு, கோமியியல் ஆய்வு ஆகிய துறைகளின் ஆய்வு மேற்கொள்ளத் தக்க வகையில் ஆய்வுத் துறைக்கு வலிவு சேர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாவது திட்டக் காலத்தில் வன இயல் ஆய்வுச் செலவீட்டு மதிப்பு 20 இலட்சம் ரூபாயாகும்.

1977-78ஆம் ஆண்டில் 3.07 இலட்சம் செலவில் மரபியல் ஆய்வு, உருவளவு துறைகளிலும் ஆய்வை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**முந்திரித் தோட்டங்கள்**

வாய்ப்பான இடங்களில் முந்திரி வளர்த்தலும், வளர்க்கப்பட்டு உள்ள முந்திரித் தோட்டங்களில் உரமிடுதல், மருந்து தெளித்தல் முதலிய தீவிர பண்படுத்தப் பணிகளை மேற்கொள்ளுவதன் மூலம் விளைச்சலை மிகுவித்தலும் இத்திட்டத்தின் நோக்கங்களாகும். இத்திட்டத்திற்கு ஐந்தாவது திட்டக் காலச் செலவீட்டின் மதிப்பு ரூ. 75 இலட்சமாகும். 1977-78ஆம் ஆண்டில் 11.00 இலட்சம் ரூபாய் செலவில் திருச்சி, மதுரை கோட்டங்களில் 800 எக்டேரில் முந்திரி வளர்க்கவும், பழைய தோட்டங்களில் பண்பாட்டுப் பணிகள் செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வளர்த்தல்!**

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரப்பர் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தொழிலாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதலும் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

**ரப்பர் தோட்டங்கள்**

ரப்பர் சார்ந்த தொழில்கள் வளர்ந்து வருவதாலும், குறிப்பிட்ட சில தொழில்களுக்கு இயற்கை ரப்பரை விரும்புவதாலும், செயற்கை ரப்பரின் விலை உயர்வால் அது சில சிறப்பான தொழில்களுக்கு ஒதுக்கப்படுவதாலும் இயற்கை ரப்பருக்குத் தேவை மிகக் கூடும். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் ரப்பர் வளர்ப்புக்கு வாய்ப்பான சூழ்நிலையை வழங்குகிறது. ஐந்தாம் திட்டத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் 800 எக்டேரில் ரப்பர் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டில் பழைய தோட்டங்களைப் பாதுகாக்கவும், குடியிருப்புக் கட்டல், சாலை அமைத்தல் மேற்கொள்ளவும்



11.03 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### கூழ் மரத் தோட்டங்கள்

மரங்களை மூலப் பொருளாகக் கொண்டு இயங்கும் தொழில்களின் தேவையை ஈடு செய்ய விரைந்த வளர்ச்சியுடைய தைல மர வகைகளையும் மூங்கில் போன்றவற்றையும் வளர்ப்பதை விரைவுபடுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் திட்டக் காலத்தில் 100 இலட்சம் ரூபாய் செலவில் 18,000 எக்டேரில் தோட்டங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டில் 31.38 இலட்சம் ரூபாய் செலவில் 2,470 எக்டேரில் தோட்டங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### பண்ணைக் காடுகள்

சிற்றூர்களில் அரசு புறம்போக்கு நிலங்களிலும் பயனற்ற நிலங்களிலும் வாய்ப்பான திட்டுகளில் காடு வளர்ப்பதே இத்திட்டத்தின் நோக்கம். ஐந்தாவது திட்டத்தின் கீழ் ரூ. 9.5 இலட்சம் செலவிட்டு 25,000 எக்டேரில் காடு வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977-78ஆம் ஆண்டில் 33 இலட்சம் ரூபாய் செலவில் 6,210 எக்டேரில் காடு வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## தொழில் வாணிகத் துறைகளுக்கு வேண்டிய மரங்கள் வளர்த்தல்

### தேக்கு மரம்

தமிழ்நாட்டில் பெரு மரங்கள் வளத்தை மிகுவிக்கத் தேக்குப் போன்ற கடின வகை மரங்களை வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் திட்டக் காலத்தில் ரூ. 15 இலட்சம் செலவில் 2,500 எக்டேரில் தேக்கு மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் ரூ. 6 இலட்சம் செலவில் 500 எக்டேரில் தேக்கு மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தீக்குச்சித் தொழிலுக்கு வேண்டிய குச்சிகளையும், பெட்டிகளையும் அணியமாக்கத் தேவையான மர வகைகளை மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் மாவட்டங்களில் வளர்த்தலே இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் திட்டத்தில் 4 இலட்சம் ரூபாய் செலவில் 1,000 எக்டேர் பரப்பில் இவ் வகை மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் வாகை, இலவ மரம் போன்ற மர வகைகள் 0.60 இலட்சம் ரூபாய் செலவில் 100 எக்டேர் பரப்பில் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 'வாட்டில்' தோட்டங்கள்

தோல் பதனிடு தொழில் மற்றும் மரக் கூழ் தொழில் ஆகியவற்றிற்கு வாட்டில் மரமும், பட்டையும் சிறப்பின மூலப்பொருளாகும். நீலகிரியிலும், மேல்பழனியிலும் வாட்டில் மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஐந்தாவது திட்டக் காலத்தில் 35 இலட்சம் ரூபாய் செலவில் 10,000 எக்டேர் பரப்பில் வாட்டில் தோட்டம் எழுப்பத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் 6.50 இலட்சம் ரூபாய் செலவில் 1,400 எக்டேர் பரப்பில் வாட்டில் தோட்டம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### ஆற்றங்கரை, கால்வாய்க்கரை, ஏரிக்கரையோரக் காடுகள்

வெட்டு மரங்களை அதிக அளவு பெறுதற்கும், மண் அரிப்பைத் தடுப்பதற்கும், பொருளாதாரச் சிறப்புள்ள மரங்களை வளர்ப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். ஐந்தாம் திட்டக் காலத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவில் 5,000 எக்டேர் பரப்பில் மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் 12.21 இலட்சம் ரூபாய் செலவில் 1,270 எக்டேர் பரப்பில் மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### விறகு மரக் காடுகள்

மக்களின் எரிபொருள் (விறகு) தேவையை ஈடு செய்யும் மர வகைகளை வளர்க்க இத் திட்டம் வகை செய்கிறது. ஐந்தாம் திட்டக் காலத்தில் 220 இலட்சம் ரூபாய் செலவில் 31,000 எக்டேர் பரப்பில் விறகு மர வகைகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் சவுக்கு மர வகைகள், பிற வகை மரங்களை 37.43 இலட்சம் ரூபாய் செலவில் 2,885 எக்டேர் பரப்பில் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### சந்தன மரக்காடு

வனத் துறை வருவாயில் மூன்றில் ஒரு பங்கு, சந்தன மர

## காடுபடு சிறு பொருள்கள்....

புளி, கொக்கோ, இலவங்கம், குங்கிலியம், கற்பூர தைல மரம், எலுமிச்சை, கடுக்காய் முதலிய காடுபடு சிறு பொருள்கள் நல்கும் மரங்களை வளர்ப்பதன் மூலம் காடுபடு சிறுபொருள்களிலிருந்து வருவாய் கூடுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளதால் இத்தகைய மரங்களை வளர்ப்பதே காடுபடு சிறுபொருட்கள் வளர்ப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாட்டில் ஐந்தாம் திட்ட காலத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் 2,500 எக்டேர் பரப்பில் மரம் வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது. 1977—78-ஆம் ஆண்டில் 8 இலட்சம் ரூபாய் செலவில் 1,105 எக்டேர் பரப்பில் காடுபடு சிறுபொருள்கள் தரும் மரங்களை வளர்க்க திட்டமிடப்பட்டுள்ளது.

விற்பனை மூலமே கிடைக்கிறது. சந்தன மர வளத்தை மிகுவிக்க வாய்ப்பான இடங்களில் செயற்கை முறையில் சந்தன மரம் வளர்க்கப்படுகிறது. ஐந்தாம் திட்டக் காலத்தில் 500 எக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் 9.07 இலட்சம் ரூபாய் செலவில் 200 எக்டேர் பரப்பில் சந்தன மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மிகைக் காடுகள்**

புறம்போக்குகள், குன்றுச் சரிவுகள், சாலை ஓரங்கள் முதலிய இடங்களில் விறகு, எருத் தழை, புல் முதலிய தேவைகளை ஈடு செய்யும் வகையில் மரம் வளர்த்தலுக்கு வகை செய்கிறது மிகைக் காடுகள் வளர்க்கும் திட்டம். மண்ணின் வளம், ஈரம் ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கும், மக்களுக்குப் பூங்காவாகவும் இக்காடுகள் பயன்படுகின்றன. ஐந்தாம் திட்டக் காலத்தில் 90 இலட்சம்ரூபாய் செலவில் 25,000 எக்டேர் பரப்பில் மரம் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் 23.15 இலட்சம் ரூபாய் செலவில் 3,100 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்பும், சாலை ஓரங்களில் மரம் வளர்ப்பும், பொது மக்களுக்குக் கன்றுகள் வழங்குதலும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

**குன்றுப் பகுதிகளின் வளர்ச்சித் திட்டம்**

மத்திய அரசு ஆதரவு பெற்ற இத்திட்டத்தின் கீழ் ஐந்தாவது திட்டக் காலத்தில் நீலகிரி மாவட்டத்தில் 31.33 இலட்சம் ரூபாய் செலவில் காடுகளை வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

1977-78ல் 5 இலட்சம் ரூபாய் செலவில் தைல மரங்கள், பைன் மரங்கள் முதலியன வளர்க்கத் திட்டம் இடப்பட்டுள்ளது. இதோடு ஊராட்சி நிலங்களில் பண்ணைக் காடுகள் வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராம்பு வளர்த்தல்!

கன்னியாகுமரி மாவட்டத்தில் 31 இலட்சம் ரூபாய் செலவில் 100 எக்டேர் பரப்பில் கிராம்பு வளர்த்தல் இத்திட்டத்தின் நோக்கம். 1977—78-ல் 7·30 இலட்சம் ரூபாய் செலவில் 35 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**முந்திரிகளின் பதியப் பெருக்கம்:**

இது ஒரு மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டமாகும். கூடுதல் விளைச்சலைத் தரும் பதியப் பெருக்க முறையில் முந்திரியை வளர்த்தலே இதன் நோக்கமாகும். 1977-78ல் 0.91 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மைய அரசு ஏற்பாதரவு திட்டங்கள் கலப்பின மரங்கள் வளர்த்தல்**

இது மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். இத்திட்டத்தின் கீழ் செலவிடப்படும் தொகை மத்திய அரசும் மாநில அரசும் 75 : 25 விழுக்காட்டில் பங்கிடப்படுகிறது. 1977-78ல் 16 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1,000 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்பும், 3,000 எக்டேர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகளும் மேற்கொள்ளப்படும். கிராமப் புற மக்களுக்குத் தேவையான விறகு, எருத் தழை, தடி மரம் முதலியவற்றை ஈடு செய்யும் வகையில் ஊராட்சி நிலங்களில் மரங்கள் வளர்க்கப்படும்.

**தரம் தாழ்ந்த காடுகளை வளப்படுத்துதல்:**

இதுவும் மத்திய அரசு ஆதரவு பெற்ற திட்டம். திட்டத்திற்கு ஆகும் செலவுத் தொகை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 விழுக்காட்டில் பகிர்ந்து கொள்ளுகின்றன. 1977-78ல் 16.12 இலட்சம் ரூபாய் செலவிட்டு 800 எக்டேர் பரப்பில் மரம் வளர்ப்பும் 1,500 எக்டேர் பரப்பில் முன்னேற்பாடு வேலைகளும் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. மக்களின்விறகு மற்ற தேவைகளை ஈடுசெய்ய வனத் துறையின் தரம் தாழ்ந்த காடுகளை மீண்டும் வளப்படுத்த வகை செய்கிறது இத் திட்டம்.

[ தமிழ்நாடு சட்டப் பேரவையில் 16-8-77 அன்று, வைக்கப்பட்ட வனத் துறை மானியக்கோரிக்கை கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]

## மதுரை மாவட்டத்தில் மரக்கூழ் மரங்கள்!

மதுரை மாவட்டம் மேல் பழனிப் பகுதியில் 24 இலட்சம் ரூபாய் செலவில் 1,500 எக்டேர் பரப்பில் தொழில் துறை மூலப் பொருள்களை வழங்கும் தைல மர வகைகள், பைன் மரங்கள் முதலியன வளர்த்தலே மரக்கூழ் மரங்கள் வளர்த்தல் திட்டத்தின் நோக்கமாகும். 1977—78-ல் 9.36 இலட்சம் ரூபாய் செலவில் 600 எக்டேர் பரப்பில் இவ்வகை மரங்கள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# கோ-ஆப்டெக்ஸ் அளிக்கும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை தங்கத்துக்கு நிகரானது!

ஆம்! காஞ்சிபுரம் பட்டுச் சேலைக்கு தங்க நிகர் மென்மை எழிலூட்டுவது கோ-ஆப்டெக்ஸ். பற்பல டிசைன்கள். அசல் சரிகை. அணிபவருக்கு எழில் கூட்டும் கண்கவர் வண்ண வகைகள்.

மற்றும் ஆரணி, கும்பகோணம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம் கைத்தறி நூல் சேலைகள், சுங்கடி பிரிண்டுகள், சின்னாளப்பட்டி சேலைகள்.





# வீட்டு விலங்குகளால் காட்டு விலங்குகளுக்கு விளைந்திடும் கேடு!

—ஜி. திருமால், ஐ.ஏ.எஸ்.,
செயலாளர்,
வனத்துறை, தமிழ்நாடு அரசு.

தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான காட்டுப் பகுதிகளில் கால்நடைகள் கட்டுப்பாடின்றி மனம் போல் மேய்ந்து வருகின்றன. அக்கால்நடைகளின் சொந்தக்காரர்கள், அவ்வாறு கால்நடைகள் மேய்வதற்குக் கட்டணம் செலுத்துவதில்லை. அவ்வாறு கட்டணம் செலுத்தினாலும் அது மிக மிகக் குறைந்த கட்டணமாகவே உள்ளது. அரசுக்குச் சொந்தமான காடுகளில், ஒவ்வொரு கால்நடையும் மேய்வதற்கு ரூபாய் ஒன்று வீதம் மிகக் குறைந்த கட்டணமே விதிக்கப்படும்போது, அருகாமையில் அரசுக் காடுகளைப் பெற்றிராத கிராமங்களில் தனிப்பட்ட மேய்ச்சல் நிலச் சொந்தக்காரர்கள் ஒவ்வொரு கால்நடைக்கும் ரூபாய் 30 முதல் ரூபாய் 40 வரை மேய்ச்சல் கட்டணம் விதிக்கிறார்கள்.



காடுகளைச் சார்ந்த மேய்ச்சல் நிலங்களில் விஞ்ஞான அடிப்படையான பராமரிப்புகளை நாம் மேற்கொள்ளவில்லை. அவ்வப்போது மேய்ச்சலைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட சில முயற்சிகளும் தோல்வி அடைந்துவிட்டன. இத் தோல்விக்கு கிராமத்தினரின் அறியாமையும், ஒத்துழையாமையுமே முக்கிய காரணமாகும். அது போலவே, அந்தப் பகுதியைச் சார்ந்த கால்நடைகள் தங்கள் மேய்ச்சலுக்கு முழுக்க முழுக்க காடுகளையே நம்பியிருப்பதும் காரணமாகும். நெடுந்தொலைவில் உள்ள இடங்களைச் சார்ந்த கால்நடைகளும் இடம் விட்டு இடம் பெயர்ந்து சில பருவங்களில் காடுகளில் மேய்கின்றன. இதன் காரணமாக, காட்டு நிலங்களில் மேயும் கால்நடைகளின் நெருக்கம் மேலும் அதிகமாகிறது.

1952-ஆம் ஆண்டின் இந்தியக் காடுகள் கொள்கை, காட்டுப் பகுதிகளில் மேய்ச்சல் தரைகளை நிருவாகித்தல் தொடர்பான வழிகாட்டுதல்களை வரையறுத்துக் கூறியுள்ள போதிலும், இதுபற்றி காடுகள் தொடர்பான மத்திய வாரியத்தில் திரும்பத் திரும்ப விவாதிக்கப்பட்டிருந்தபோதிலும் நாடாளுமன்ற மக்கள் அவையின் மதிப்பீட்டுக் குழு காடுகள் கொள்கையைச் செயல்படுத்துவதில் அக்கறையற்ற தன்மை காணப்படுவதைக் கடுமையான முறையில் சுட்டிக் காட்டியிருந்த போதிலும், மேய்ச்சலைக் கட்டுப்படுத்தி விஞ்ஞான அடிப்படையில் அமைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய பணிகள் நிறைய உள்ளன.

கால்நடைகளை மேய விடுவது பூங்காக்களுக்கும், வனவிலங்கு புகலிடங்களுக்கும் கேடு விளைவிப்பதாக இருப்பதால், தேசிய பூங்காக்களிலும், வனவிலங்குகள் புகலிடங்களிலும் மேய்ச்சல் ஒரு



பெரும் பிரச்னையாகவே உள்ளது. அற்பசொற்பமாக மழைபெய்யும் பகுதிகளில் இப்பிரச்சனை மேலும் கடுமையாக உள்ளது. குறைந்த அளவே மழை பெய்யும் பகுதிகளில் மேய்ச்சலுக்கான இடங்களின் தேவை அதிகமாக உள்ளது. ஆகவே, வீட்டு விலங்குகளின் மேய்ச்சல், காட்டு விலங்குகளுக்கு நேரடிப் போட்டியாக உள்ளது. பசு மாட்டு மந்தைகள் வனவிலங்குகளின் அமைதியைக் கெடுத்துவிடுகின்றன. இது, நமது வனவிலங்குகளின் வாழ்வை அச்சுறுத்துவதாக உள்ளது.

முதுமலையைச் சார்ந்த மாசினகுடி, ஆனமலை வனவிலங்குக் புகலிடத்தின் கீழ்ப்பகுதிச் சரிவுகள், களக்காடு, முண்டந்துறை வனவிலங்குப் புகலிடங்களின் பெரும்பகுதி, அதே போல் கோடிக்கரை ஆகிய பகுதிகளில் வாழும் மான் மற்றும் கலைமான்களுக்கு, அருகில் உள்ள இடங்களிலிருந்து மேய்வதற்கு வரும் ஆயிரக்கணக்கான கால்நடைகள் பெரும் தீங்கு விளைவிப்பதாக உள்ளன.

புகழ் பெற்ற முதுமலை வனவிலங்குப் புகலிடம் பற்றியும் இங்குக் குறிப்பிடுவது சிறந்ததாகும். முதுமலையில் முன்பெல்லாம் ஒரே நேரத்தில் 50 முதல் 70 காட்டெருமைகளை ஒரே கூட்டமாகக் காண முடிந்தது. மேய்ச்சலுக்கு வரும் வீட்டு விலங்குகளின் மூலம் பரவிய வெக்கை நோயினால் (Rinderpest), இந்தக் காட்டெருமைகள் 1969-ஆம் ஆண்டில் தாக்கப்பட்டு பெருமளவில் இறந்தன. இதனால், கம்பீரமான தோற்றம் கொண்ட காட்டெருமைகளின் கூட்டம் தற்பொழுது குறைந்து விட்டது. குறைந்தது 2 பத்தாண்டுக்கால அளவுக்குக் காட்டெருமைகளைப் பேரார்வத்துடன் பாதுகாத்தால்தான், முன்பு போல் காட்டெருமைகளை கூட்டமாகக் காணமுடியும். இதன் காரணமாகவே, வனவிலங்குப் புகலிடங்களை அடையும் கால்நடைகளுக்கு, 'வெக்கை' போன்ற தொற்று நோய்களுககுத தடுப்பு ஊசி போடப்படுகின்றன.

மேய்ச்சலுக்கு அனுமதிப்பது, இந்திய வனவிலங்குகள் பாதுகாப்பின் ஒரு அங்கமாகவே இருந்து வந்துள்ளது என்றும், மேய்ச்சலுக்கு அனுமதிக்கும் பழக்கம் நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக காடுகளில் இருந்து வந்துள்ளது என்றும் வாதாடப்படுகிறது. ஒரு தடவை, ஒரு சில கால்நடைகளைக் காடுகளில் மேய்வதற்கு அனுமதித்துவிட்டால், எத்தனை பேர் சட்டபூர்வமாக கால்நடைகளை மேயவிடுவார்கள் எத்தனை பேர் சட்டத்திற்குப் புறம்பாகக் கால்நடைகளை மேயவிடுவார்கள் என்பது தெரியாது. ஆனால், பஞ்சம் அல்லது வறட்சிக் காலங்களில் ஏராளமான கால்நடைகள் வனவிலங்குப் புகலிடங்களில் மேயவிடப்படுகின்றன. இதனால் பெருமளவில் பாதிக்கப்படுவது வனவிலங்குகளே. பொதுவாக உற்பத்திக்கு உதவாத தரம் குன்றிய கால்நடைகளைக் காப்பாற்றுவதற்காக, புள்ளிமான் ('சித்தல்') கடமான் ''சாம்பர்') போன்ற மான் வகைகளை இழக்கிறோம். ஒரு முறை கால்நடைகளால் வனவிலங்குப் புகலிடங்களின் அமைதி குலையுமானால், அத்தீங்கிலிருந்து விடுபெற்று மீண்டும் அப்புகலிடம் பழைய நிலையை அடைய பல ஆண்டுகள் ஆகும். எனவேதான், வனவிலங்குப் பாதுகாப்பு நிறுவனங்கள், வனவிலங்குப் புகலிடங்களை அரசுப் பண்ணைகளாகக் கருதுவதுடன், அவைகளைக் காக்க மேய்ச்சலைத் தடுப்பதிலும் அல்லது முறைப்படுத்துவதிலும் ஆர்வம் காட்டுகின்றன.

தமிழ் நாட்டில் உள்ள காடுகளில் மொத்தப் பரப்பு 20,190 சதுர கிலோ மீட்டர். ஆனால் கால்நடைகளின் எண்ணிக்கை— பசுக்கள், எருமைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள் ஆகிய அனைத்தும் சேர்ந்து—230 இலட்சம் உள்ளன. இது சதுர மீட்டருக்கு 1,000 கால்நடைகள் வீதம் மேய்ச்சல் நெருக்கம் இருப்பதைக் காட்டுகிறது. ஆனால் நடைமுறையில் இந்நெருக்கம் காடுகளின் வெளிச்சுற்றுச் சரிவுகளில் நான்கு மடங்காக இருக்கும்: ஏனெனில், அருகில் உள்ள கிராமங்களில் இருந்து கால்நடைகள் பெருமளவில் சென்று காடுகளின் வெளிச்சுற்றுப் பகுதிகளில்தான் மேயக்கூடும். இவ்வாறு மேய்வது காடு முழுவதும் ஒரே சமமாகப் பரவி இருக்காது.

தமிழ் நாட்டில் உள்ள 8 வனவிலங்குப் புகலிடங்களின் மொத்த பரப்பு 2,089 சதுர கிலோ மீட்டராகும். இது காடுகளின் மொத்தப் பரப்பில் பத்தில் ஒரு பகுதியாகவே உள்ளது. காடுகளின் மொத்தப் பரப்பில் பத்தில் ஒரு பகுதியாகவே உள்ள வனவிலங்குப் புகலிடப் பகுதிகளில், அருகாமையில் உள்ள கிராமங்களில் இருந்து வரும் தரக் குறைவான கால்நடைகளைத் தடுத்து, மேய்ச்சலை அனுமதிக்காமல் இருப்பதால், கிராமத்தினரின் பொருளாதாரம் மொத்தத்தில் சீர்குலைந்து விடாது. இதற்கு மாறாக, இவ்வாறு தடுப்பதனால், அவர்கள் தரம் உயர்ந்த கர்ல்நடைகள் சிலவற்றைப் பராமரிப்பதைப் பற்றி கற்றுக்கொள்ள நேரிடும். தரங் குறைந்த ஏராளமான கால்நடைகளை வைத்திருப்பதைக் காட்டிலும் தரம் உயர்ந்த ஒரு சில கால்நடைகளைப் பராமரிப்பதே நீண்ட கால அடிப்படையில் மிகு பயன் தருவதாக இருக்கும். வனவிலங்குப் புகலிடங்களில் மேய்ச்சலைத் தடுப்பது வனவிலங்குகளின் எண்ணிக்கையைப் பழைய நிலைக்கு மீண்டும் பெருக்க உதவுவதுடன், அதிக அளவிலும் தொடர்ந்தும் மேய்ச்சலுக்கு அனுமதித்ததால் தரங் குன்றிய காடுகள் புத்துயிர் பெறுவதற்கும் உதவக்கூடும்.

# வனவிலங்குகளைப் பாதுகாப்பதில் தமிழகமே முன்னோடி

—எஸ். ஏ. ரகமதுல்லா, ஐ.எப்.எஸ்.,
தலைமை வனவிலங்குக் காப்பாளர்,
தமிழ்நாடு அரசு.

மனித வாழ்வு நிலைகுலையாத உயர்ந்த தரத்தை அடைய வேண்டும் என்பதற்காக காற்று, தண்ணீர், மண் தாதுப் பொருள், மனிதன் உட்பட உயிர் வாழ்வன போன்ற சுற்றுப்புற ஆதாரங்களைப் பராமரிப்பதே பாதுகாத்தலின் பொருள் என்று விவரிக்கப்பட்டு உள்ளது. பூமியிலுள்ள இயற்கை ஆதாரங்களை மனிதன் பயன்படுத்தத் துவங்கியதால், இயற்கையான சுற்றுப்புறச் சூழ்நிலை மிகவும் மோசமான நிலையில் சீரழிந்து விட்டது. இது, மிகவும் கவலைக்குரியதாகும். மனிதனால் அடிக்கடி ஏற்பட்ட குறுக்கீடு காரணமாக பூமியிலுள்ள தாவரங்களுக்கு அழிவு ஏற்பட்டது. இதனால் பூமியின் மேல் காணப்பட்ட சுற்றுப்புறச் சூழ்நிலை அமைப்பு முறையில் அடிக்கடி முழு அளவு ஓரளவு மாற்றம் ஏற்பட்டது. இவ்வாறு தொடர்ந்து சுற்றுப்புறச் சூழ்நிலை அமைப்பு முறைக்கு அழிவு ஏற்படுமானால் இறுதியாக மனித வாழ்வே இடருக்குள்ளாகும் என்று அஞ்சப்படுகிறது.

நீண்ட நெடுங்காலமாக நடைபெற்று வரும் கட்டுப்பாடற்ற முறையில் மரங்களை வெட்டுதல், ஆண்டிற்காண்டு இடம்பெயர்த்து சாகுபடி செய்தல், கால்நடைகளை மேய விடுதல், தீப்பிடித்தல் போன்ற செயல்கள் பல உயிர் வாழ் இனங்களின்—அழிவுக்குக் காரணமாக இருந்துள்ளன. இதனால் பல தாவர இனங்களும், விலங்கு இனங்களும் அறவே அழிந்து விட்டன. இந்த அழிவு, உலகின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கினர் வாழும் வெப்பமண்டலங்களிலும் மித வெப்ப மண்டலங்களிலும் தான் அதிகமாகக் காணப்படுகிறது.



கடந்த நூறு ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலமாகவே தமிழ் நாட்டில் காடுகள் பாதுகாக்கப் பட்டு வந்தாலும் விஞ்ஞான அடிப்படையில் காடுகள் பராமரிக்கப்பட்டு வந்தாலும், விலங்குகளும், தாவரங்களும் தொடர்ந்து சீரழிந்து வருவது, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை உணரப்படவில்லை. தமிழ் நாட்டில் உள்ள காடுகளின் மொத்தப் பரப்பளவு 20,910 சதுர கிலோமீட்டராகும்.

இந்தியாவின் மொத்த நிலப் பரப்பில் காடுகளின் பரப்பு சராசரியாக 22 சதவீதமாக இருப்பதற்கு மாறாக, தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் காடுகளின் பரப்பு, மொத்த நிலப்பரப்பில் 16 சதவீதமாகவே உள்ளது. இந்தியாவில் உள்ள காடுகளின் பரப்பு தனி நபர் ஒருவருக்கு 0.14 எக்டேர் என்ற அளவில் இருப்பதற்கு மாறாக, தமிழ்நாட்டில் தனி நபர் ஒருவருக்கு 0.05 எக்டேர் அளவுக்கே காடுகள் உள்ளன. இப் புள்ளி விவரங்கள், நமது சுற்றுப்புறங்களைப் பேரார்வத்துடன் விரைவாகப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தையும், காடுகள் தரமிழந்து வருவதைக் காலங்கடத்தாமல் மாற்றியமைக்க வேண்டிய அவசியத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

இயற்கையைப் பாதுகாப்பதன் முதல் நடவடிக்கையாக, எண்ணிக்கையில் குறைந்து வரும் வனவிலங்குகளைக் காப்பதற்காக தமிழ்நாடு அரசு பல வனவிலங்குப் புகலிடங்களை அறிவித்துள்ளது. தமிழ்நாட்டில் 8 வனவிலங்குப் புகலிடங்களும், 16 நீர்ப்பறவைப் புகலிடங்களும் உள்ளன. இவ் வனவிலங்குப் புகலிடங்களின் மொத்தப் பரப்பு 2,089 சதுர கிலோ மீட்டராகும். அதாவது காடுகளின் மொத்தப் பரப்பில் பத்தில் ஒரு பங்குப் பரப்பு முழுப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு, தாவரங்களையும் விலங்குகளையும் பாதுகாக்கும் நோக்குடன் தனிப் பணியாளர்களால் நிருவகிக்கப் படுகிறது.

நீலகிரியில் உள்ள முதுமலை வனவிலங்குப் புகலிடத்தில் (321 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது) யானைகள், காட்டெருமைகள், புள்ளி மான்கள், சிறுத்தைப் புலிகள் மற்றும் பல்வேறு வகையான பறவைகள், காணப்படுவதால் அவைகளைக் கண்டு களித்து இன்புறலாம்.

குறைந்து வரும் புலிகளைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காகத் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள முண்டந்துறையில் 1963-ஆம் ஆண்டில் புலிகள் புகலிடம் ஏற்படுத்தப்பட்டது. தற்பொழுது இப்புகலிடத்தில் புலிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தபோதிலும், புள்ளி மான் கூட்டங்களையும், கடமான் கூட்டங்களையும், சில சிறுத்தைப் புலிகளும், நீண்ட வாலுடைய நீலகிரிக் குரங்குகள், சிங்கவால் குரங்குகள், சாதாரணக் குரங்குகள் ஆகியவற்றின் கூட்டங்களையும் காணலாம்.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் மட்டுமே காணப்படுவதும், தற்பொழுது எண்ணிக்கையில் குறைந்து வருவதுமான சிங்கவால் குரங்குகளைப் பாதுகாப்பதற்காக, களக்காடுஒதுக்கப்பட்ட




| வனவிலங்குப் புகலிடங்கள் | | சுற்றுலா செல்வதற்கு ஏற்ற பருவம் |
|---|---|---|
| முதுமலை | .. | பிப்ரவரி முதல் மே வரை |
| வேடந்தாங்கல் | .. | நவம்பர் முதல் பிப்ரவரி வரை |
| கிண்டி பூங்கா | . | ஆண்டு முழுவதும் |
| கோடிக் கரை | .. | நவம்பர் முதல் மார்ச்சு வரை |
| முண்டந்துறை | .. | ஜனவரி முதல் செப்டம்பர் வரை |
| ஆனைமலை | .. | பிப்ரவரி முதல் மே வரை |
| களக்காடு | .. | செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை |
| வேட்டன்குடி | .. | மழைக் காலம் |



காடுகள் (225 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது) முழுவதையும் ஓராண்டிற்கு முன்பாக வனவிலங்குப் புகலிடமாக அறிவிக்கப்பட்டது.

ஆனைமலை வனவிலங்குப் புகலிடம் (958 சதுர கிலோ மீட்டர் பரப்புக் கொண்டது) 1971-ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. இப்புகலிடத்தில் யானைகள், காட்டெருமைகள், சிறுத்தைப் புலி முதலியவற்றைக் கண்டு களிக்கலாம்.

கோடிக் கரை வனவிலங்குப் புகலிடம் (17.3 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது) கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. இங்கு கறுப்பு மான்கள், காட்டுக் குதிரைகள் கூட்டங்களையும், குறிப்பிட்ட காலத்தில் வந்து போகும் பறவைகள், கோணல் மூக்கு நாரை, கூளக் கடா, நாராயணப் பட்சி முதலிய நீர்ப் பறவைக் கூட்டங்களையும் கண்டு களிக்கலாம்.

சென்னையில் உள்ள கிண்டி பூங்காவில் (2.82 சதுர கிலோ மீட்டர் பரப்புடையது) கடற்கரையோரத்தில் வளரக் கூடிய முள்மரக் காடுகள் நிறைந்ததாகும். இங்கு ஏராளமான கறுப்பு மான்களைக் கண்டு இன்புறலாம். விரைவில் இது, தேசிய பூங்காவாக அறிவிக்கப்படவிருக்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள 18 நீர்ப் பறவைப் புகலிடங்களில் 2 மட்டும் வனவிலங்குப் புகலிட நிலையை அடைந்துள்ளன. அவ்விரண்டில் முதலிடம் பெற்றது வேடந்தாங்கல் பறவைகள் புகலிடமாகும். இது அனைத்துலகப் புகழ்பெற்றது; சென்னையின் தெற்குத் திசையில் 80 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. மற்றொரு பறவைகள் புகலிடம் மதுரைக்குக் கிழக்கே 50 கிலோ மீட்டர் தொலைவில் வேட்டன்குடி என்ற இடத்தில் அமைந்துள்ளது. மழைக் காலத்தில் பல்வேறு வகையான நாரையினங்களை இங்குக் காணலாம்.

## வனவிலங்குப் பாதுகாப்புப் பிரிவைத் திருத்தி அமைத்தல்

எல்லா வனவிலங்குப் புகலிடங்களிலும் வனப் பராமரிப்புப் பணிகளையும், வனவிலங்குகளைப் பராமரிக்கும் பணிகளையும் ஒருங்கு இணைத்து ஒரு முழு நேர தலைமை வனவிலங்குக் காப்பாளரின் தலைமையின் கீழ் இயங்கிடும் வகையில் வனவிலங்குப் பாதுகாப்புப் பிரிவைத் திருத்தி அமைத்ததில் இந்தியாவிலேயே முன்னோடியாக உள்ளது தமிழகமேயாகும். பெரிய வனவிலங்குப் புகலிடங்கள் ஒவ்வொன்றும் ஒரு வனவிலங்குக் காப்பாளரின் கீழ் உள்ளன. அவர் முக்கியமாக வனவிலங்குக் காப்பாளராகவே இருப்பார். அனைத்து நிருவாகப்பணிகளையும் பொறுத்த வரையில் அவரே மாவட்ட வன அலுவலராகச் செயல்படுவார். இப் புகலிடங்களில் கால்நடைகளின் மேய்ச்சல் தடுக்கப்பட்டு உள்ளது. வேறு மேய்ச்சல் நிலம் இல்லாத பகுதிகளில் மட்டும் மேய்ச்சல் அனுமதிக்கப்பட்டுள்ளது. மேய்ச்சலை முழு அளவில் தடுக்காவிட்டாலும் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு குறைக்கப்பட்டு உள்ளது. பெரும் பாலான இடங்களில் விறகு, மரம், காடுபடு சிறு பொருள்கள் முதலியவற்றை சேகரிப்பது நிறுத்தப்பட்டுவிட்டது. 'பொருளாதார நோக்கில் பார்க்கும்போது, இவைகள் இன்றியமையாத தேவையாக இருக்குமிடங்களில் மட்டும் சிறு அளவில் விறகு வெட்டுதல், மரம் வெட்டுதல், காடுபடு சிறு பொருள்களைச் சேகரித்தல் முதலிய பணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. இப் பணிகளும் இறுதியாக நிறுத்தப் பட்டு விடும்.

காடுகளில் உள்ள மரங்களை வெட்டி வீழ்த்தி அகற்றிவிட்டு, அவ்விடங்களில் ஒரே வகைப் பயிரை மட்டும் சாகுபடி செய்யும் முறைக்கு ஊக்கமளிப்பதும் நிறுத்தப்பட்டுள்ளன. சுருங்கக் கூறவேண்டுமானால், மரங்களை வெட்டி பசுமையை இழக்கச் செய்தல், தரங் குறையச் செய்தல் போன்றவைகளை நிறுத்தி விடுவதுடன், ஆரம்பத்தில் இருந்த நிலைக்கு மீண்டும் கொண்டு வருதல் வேண்டும். வனவிலங்குப் புகலிடங்களுக்கு வெளியே உள்ள காட்டுப் பகுதியும், காடு அல்லாத பகுதியும் வனவிலங்குப் பாதுகாப்புப் பணியாளர்களின் கண்காணிப்பில் இருந்து வருகின்றன.

## வனவிலங்குப் பாதுகாப்புச் சட்டத்தையும் விதிமுறைகளையும் செயல்படுத்துதல்

1972ஆம் ஆண்டின் வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தையும், இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதி முறைகளையும் தமிழ் நாட்டிற்கு விரிவுபடுத்தியதே, வனவிலங்குகள் பாதுகாப்பின்கீழ் எடுக்கப்பட்ட மிக முக்கியமான நடவடிக்கையாகும். வனவிலங்குகள் தொடர்பான தொழிலையும், வனவிலங்குகள்உற்பத்திப் பொருள்களையும் கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்ததன் மூலமாகவும், வேட்டையாடுவதற்குரிய உரிமம் அளிப்பதைஒருமுகப்படுத்தியதன் மூலமாகவும் வனவிலங்குகளைச் சிறந்த முறையில் பாதுகாத்துப் பராமரிக்க முடிந்துள்ளது. ஒதுக்குக் காடுகளுக்கு வெளிப்புறத்தில் வனவிலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தைச் செயல்படுத்துவதால், வனவிலங்குகளைத் திறமையாகப் பாதுகாக்க முடிகிறது. இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடியாக உள்ளது.

**புலிகளைச் சுடுவதற்கு இந்தியா வெங்கும் 1970-ஆம் ஆண்டில் தடைவிதிக்கப்பட்டதற்கு முன்பாகவே, புலிகளைப் காப்பாற்ற 1963-ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டது தமிழ்நாடு அரசுதான் என்பது குறிப்பிடத்தகுந்ததாகும்.**

சேவை செய்வதற்காகவே தங்களை அர்ப்பணித்துக் கொண்டவர்களால் வனவிலங்குகள் நிருவகிக்கப்படுகின்றன. வனவிலங்குகளின் நிருவாகத்தில் தொடர் வனவிலங்குப் பாதுகாப்பாளராபுடையவர்கள், வனவிலங்குகளிடம் மாறாத அன்பு கொண்டவர்களாக இருப்பது அவசியமாகும். இக்குறிக்கோளைக் கருத்தில் கொண்டு, வனவிலங்குகளில் ஆர்வம் காட்டும் இளைஞர் மன்றங்களை வனத்துறை அமைத்து வருகிறது. வனவிலங்குகளையும், காடுகளையும் பற்றி அறிந்து கொள்வதில் ஆர்வமும், அன்பும்கொண்ட மாணவர்களைக் கண்டறிந்து, அத்தகையவர்கள் இதன் தொடர்பான விஞ்ஞானத்தைக் கற்றுக் கொள்வதற்குத் தகுந்த வசதிகளும், படிப்பு உதவித் தொகைகளும் அளிக்கப்படுகின்றன.

விஞ்ஞான ஆராய்ச்சி, வனவிலங்குகள் பாதுகாப்பில் ஒரு ஒருங்கிணைந்த அங்கமாகக் கருதப்படுகிறது. வனவிலங்குகளை முறையாகவும், தீவிரமாகவும் நிருவகிக்க வனவிலங்குகளின் சுற்றுப்புறச் சூழ்நிலை, தாவரங்கள் மற்றும் விலங்குகளின் உறைவிடம் பற்றிய அறிவு இன்றியமையாதது. இந்நோக்கின் அடிப்படையிலேதான் வனவிலங்குகளின் உறைவிடத்திலேயே, அதன் பழக்க வழக்கங்களை ஆராய்வதற்காக களக்காடு வனவிலங்குகள் புகலிடத்தில் ஒரு முழு நேர உயிரியல் வல்லுநர் நியமிக்கப்பட்டுள்ளார்.

வனவிலங்குகள் பாதுகாப்பு என்னும் வெற்றி வாசலைத் திறந்திட உதவும் திறவுகோலாக பயிற்சி பெற்ற பணியாளர்கள் உள்ளனர். எனவே, தேர்ந்தெடுக்கப்பெற்ற அலுவலர்கள் இந்தியாவில் அல்லது அயல் நாடுகளில் வனவிலங்குகள் பற்றிய சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகின்றனர்.

## அழிந்து வரும் வனவிலங்குகளை இனப்பெருக்கம் செய்தல்

புலி, சிறுத்தைப் புலி, முதலை, நான்கு கொம்புகளையடையமான், கருப்பு மான், சிங்க வால்குரங்கு, நீலகிரி குரங்கு மற்றும் பல விலங்குகள் எண்ணிக்கையில் குறைந்து, அற்பமாகவே காணப்படுகின்றன. இவைகள் அறவே அழிந்து விடுமோ என்ற அஞ்சத்தக்க நிலை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. இந்திய அரசு அளிக்கும் நிதி உதவியைக் கொண்டு தமிழ் நாடு அரசு, அருகிவரும் இவ்விலங்குகளை அறவே அழிந்திடாமல் தடுப்பதற்கும், அவைகளை கட்டுப்படுத்தப்பட்ட முறையில் இனப் பெருக்கம் செய்வதற்குமான முயற்சிகளை மேற்கொண்டு உள்ளது.

சாத்தனூரில் முதலைப் பண்ணை அமைக்கும் திட்டம் 1776-77 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. முதலை வளர்ப்பதற்கான குளங்கள் அமைக்கும் பணி முடிந்து விட்டது. முதலைகளின் முட்டைகளைச் சேகரித்து, பொரிக்க வைப்பதில் வெற்றி பெற முடிந்துள்ளது. சென்னை, சாத்தனூர், ஒகேனக்கல், அமராவதி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கட்டுப்படுத்தப்பட்ட இனப் பெருக்க நிலையங்களிலிருந்து ஏராளமான முதலைக் குட்டிகளைத் தற்பொழுது தமிழ் நாடு உற்பத்தி செய்ய முடியும். இயற்கையாக தண்ணீரில் முதலை இனப் பெருக்கம் நடைபெறுவதை விட, இச் செயற்கை முறையில் அதிக எண்ணிக்கை முதலைக் குட்டிகளை உற்பத்தி செய்ய முடிகிறது.

கறுப்பு மான்களின் எண்ணிக்கை விரைவாகக் குறைந்து வருகிறது. இவைகளை அழிவிலிருந்து காப்பாற்றுவதற்கு கிண்டிபூங்கா, தஞ்சை மாவட்டத்தில் உள்ள கோடிக்கரை ஒதுக்குக் காடுகள், பவானிசாகர் அருகில் உள்ள சுஜ்ஜில்கோட்டை ஆகிய இடங்களில் தகுந்த பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. இவ்வகையில் கோடிக்கரை வனவிலங்குப் புகலிடத்தை மேம்படுத்துவதற்காகவும் இந்திய அரசு ஒரு குறிப்பிட்ட தொகையை அனுமதித்துள்ளது.

கேரளாவிலும் தமிழகத்திலும் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகளில் மட்டுமே சிங்கவால் குரங்குகள் காணப்படுகின்றன. சிங்கவால் குரங்குகள் காணப்படும் புகலிடத்தை மேம்படுத்துவதற்காக, 4.25 இலட்சம் ரூபாயை இந்திய அரசு வழங்கியுள்ளது. இத்தொகை, இப்புகலிடத்தில் சாலைகள் அமைப்பதற்காகவும், வண்டி செல்லாத பாட்டை அமைப்பதற்காகவும், ஓய்வு இல்லத்தில் மேம்பாடு செய்வதற்காகவும், இந்த இனம் பற்றியும் அதன் உறைவிடம் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள்

வனவிலங்குகளைக் காண்பதற்காக வரும் அயல்நாட்டு, உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள், பல்வேறு புகலிடங்களைச் சுற்றிப் பார்க்கவும் அங்கு தங்குவதற்காகவும் வரும் ஆராய்ச்சி நிபுணர்கள், இயற்கை வல்லுநர்கள் ஆகியோர்களின் வசதிக்காக ஓய்வு இல்லங்கள், தற்காலிக தங்குமிடங்கள் ஆகியவை மேலும் அதிகப்படுத்தப் பட்டுள்ளன. எல்லாப் பருவத்திற்கும் ஏற்ற நல்ல சாலைகள் அமைத்தல், வனவிலங்குகளைக் காண்பதற்கு உதவும் கோபுரங்கள் அமைத்தல், ‘வேன்’, மினி பஸ், ஜீப் போன்ற வாகன வசதி அளித்தல், குறைந்த கட்டணத்தில் யானை மேல் அமர்ந்து பார்வையிடுதல்போன்ற வசதிகளைச் செய்து புகலிடங்களின் 'உள்ளே செல்வதற்கான போக்குவரத்து வசதிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாடே முதன் முதலாக வனவிலங்குகள் பற்றிய அறிவுரை வழங்கும் மாநில வாரியத்தை அமைத்தது.

# கானகம் வளர்ப்போம்!

காணுயிர் கண்போன்று காத்திடுக; காவாக்கால்
நாமுயர்வு எய்தோம் நலிந்து.

கானகம் வளர்ப்பீர்—காணுயிர் காப்பீர்
களைத்திடு மாந்தரே—களிப்புற வருவீர்!
விழிநிறை பசுமை விளைத்திடு அடவி
இழிந்திடும் அருவி இரைத்திடு கானம்
சலசலவென நடந்து—கலகலவெனப் பயின்று
கானுறு மூலிகைப் பயனெலாங் கலந்து
மருந்தென வாகும் மனங்கவர் வீழ்ச்சிகள்
கோடை வெயிலின் கொடுமை குறைத்து
தாய்மை யன்பின் தன்மை சேர்த்து
நோயினை யகற்றி வலிவினைக் கூட்டும்
வானுயர் மலைகள் வழங்கிடும் கருணை!
உழைத்திடு மாந்தரே, பொலிவுற வருவீர்!

கோடையில் மகிழ்ந்திட ''கோடை''யொடு ''உதகை''
ஏற்புடை புதுமகள் ''ஏற்காடு'', ''கொல்லி''
நாடியே வருக நறும்பலாக் ''குற்றாலம்''
நாடறிந்த குற்றாலம் நண்ணுவது கடிதெனில்
நண்ணுக ''சுருளி'' நல்லதோர் ''பானதீர்த்தம்''
பனிமுத்தம் நல்கிடு ''மணிமுத்தாறு'' முளதே!

கானுறை விலங்கினம் களிப்பும் திகிலும்
கலந்துமை மயக்கிடும்; கவலைகள் மறைந்திடும்.

கொழுநன் தலைகோதிப் பேன்தின்னுங் குரங்கினம்
தழுவிய குழவியுடன் தாவியே திரளும்
அழகிய காட்சியை மழலையர் கண்டால்
குதிப்பர்; மகிழ்வர்; குரங்கினந் தோற்குமே!

விரிதரு மருப்புடன் திரிதரு மானினம்
அழகிய கண்களை மருளக் காட்டி
துள்ளித் தாவி தொலைவி லோடும்!
புள்ளிமான் காட்சி புகலுதற் கெளிதோ!




ச. பாலகதிரேசன், எம்.ஏ.
மாவட்ட வன அலுவலர்,
தீவிர தோட்ட வளர்ப்புத் திட்டம்,
திருநெல்வேலி.


# காணுயிர் காப்போம்!

நேரிய கருவரிகள் நெடியதன் னுடலில்
கூரிய நகங்கள் குழைபஞ்சுக் கால்களில்
ஏறிய செவ்வரி விழிகள் கனலென
ஓங்கிய நடைபயில் வேங்கையைக் காண
வேண்டுமா? விரைவீர் ''முண்டன்துறைக்கே
ஆங்கொரு புகலிடம் வேங்கைக் கமைத்துளா
ஆங்கே புலியொடு புள்ளிமா கடமா
சிங்கமா நரிமா சிறுத்தை தன்னொடு
செந்நாய் குறுமுயல் எந்நாளுங் காணலாம்!

''முதுமலை'' யென்றொரு முதுமலை உண்டு
உதகையின் வடக்கே உறைந்திடும் அம்மலை
களிற்றினம் களிநடம் பயிற்றிடு கானகம்
''கௌர் இனம்'' எனப்படும் காட்டுமா தாய
துள்ளிடும் மானினத் தொகைக்கு வகைக்கு
இல்லையே எல்லை! மலைவகை அணிற்பிள்ளை
கருமுக மந்தியொடு மரந்தாவு மழகு
கண்டா லன்றி களித்திட வொண்ணாது!
சீறிடுஞ் சிறுத்தை, சேர்ந்தே வேட்டை
ஆடிடுஞ் செந்நாய் குறுநரி காணலாம்!
அழகிய மயில்கள் ஆடிடுங் காட்சி
பழகிய குரலில் பாடிடும் புள்ளினம்
எழிலுறு வண்ணக் கலவை உருவாய்
பொலிவுறு புள்ளின வகையோ தொகையோ
எண்ணிலு மடங்கா! கண்ணிலு மடங்கா!

பொலிவுற வந்தது புதியதோர் புகலிடம்
''களக்காடு'' என்றொரு வளக்காடு; ஆங்கே
சிங்காள மென்னும் சிங்கவால் குரங்கினம்
சிங்கார மாகத் தந்திடும் காட்சி!
மங்காமல் அவ்வினம் மறையாமல் காத்திட
இங்கிதமாய் அமைத்தார் இனியதோர் காப்பி

ஆனை தமிழகத்து மலைதனில் உயர்ந்தது
''ஆனைமலை'' யென்பார் ''ஆனைகட்டி'' யென்
ஆளியாறு பரம்பிக் குளம் தூணக்கடவு வால்ப
யாவுமுள் ளடக்கி ஆனதொரு காப்பிடமே
ஆனைமலை வன்விலங்கு உய்விடமாம்; அறிவீர்!
ஆனைகட்குப் பஞ்சமில்லை, காட்டுமா அதிகமை
பல்வேறு மானினமும் பறந்துவரு புள்ளினமும்
அள்ளித் தருமையா அளவிலா நல்லின்பம்!

# தமிழகத்தில் வனவிலங்கு

—டாக்டர் எஸ். ஆர். நபீஸா பானு

இன்றைக்கு மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பு தமிழ் கூறும் நல்லுலகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்று இயற்கைச் சூழலைப் பகுத்திருத்தலைத் தொல்காப்பியத்தின் வழி அறிகிறோம். இந்நூலால் வகுக்கப்பட்ட இயற்கையின் தன்மையை யொட்டி, பயிரினங்கள், கானுயிர்கள், நிலவளம் இவற்றின் அடிப்படையில்தான் மக்களின் வாழ்க்கை, உணவு, பொழுதுபோக்கு, பண்பாடு ஆகியவை அமையும் என்ற உண்மையை விஞ்ஞான அறிவும் ஆராய்ச்சி நிறைவும் மிகுந்துள்ள இன்றும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது. பாலை நிலமென்பது தனி நிலமல்ல. ''இரு நிலம் திரிந்து மாறின ஒரு நிலை'' என்ற உண்மையை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னால் கண்டவர் தமிழர். இதையே இளங்கோவடிகள் அழகாகவும், எதிர்காலத்தவருக்கு எச்சரிக்கையாகவும், காடு காண் காதையில் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

'முல்லையும் குறிஞ்சியும் முறைமையிற் திரிந்து
நல்லியல்பு இழந்து நடுங்குதுயர் உறுத்து
பாலை என்பதோர் படிவம் கொள்ளும்—'

இதைத்தான் இன்று மேல் நாட்டவர்களும், கீழ் நாட்டவர்களும்—Soil Conservation-Moisture Conservation —என்று அதன் நன்மையையும், அதன் அவசியத்தையும் இவைகளைப் பேணிப் பராமரிக்காவிடின் ஏற்படும் தீமையையும், அடிக்கடி நினைவூட்டி வருகிறார்கள். இதையே தமிழர் 2,000 ஆண்டுகட்குமுன் உணர்ந்திருந்தார்கள் என்பதை எடுத்துக் காட்டும்.

''Wild life'' அல்லது ''வனவுயிர்'' என்ற சொல்லுக்கு ''மனிதனால் பழக்கப் பெறாத விலங்கு, புள்ளினம், வளர்க்கப்படாத பயிரினம் இவை இரண்டிற்கும் சார்ந்துள்ள இயற்கைச் சூழல்'' என்று இலக்கணம் கூறலாம். மக்கட் பெருக்கம் மல்கிவிட்ட நிலையில், மனிதனின் இதர தேவைக்கெனக் காடுகளை அழித்துக் கழனிகளாக்கியும், சோலைகளை எரித்து ஆலைகளை அமைத்தும், எழில் மிகு படுகைகளில் நீர்த் தேக்கங்கள் உண்டாக்கியும் பெருமளவில் வனங்கள் குறைக்கப்பட்டது வருந்தக்கூடிய தொன்றாகும். வனங்களையே உறைவிடமாகக் கொண்ட உயிரினங்களின் எண்ணிக்கை இவ்வாறு மாற்றப்பட்ட சூழ்நிலையில் பெருமளவில் அருகிவிட்டன.

கன்னியாகுமரியிலிருந்து காஷ்மீர் வரை பாலைவனப் பகுதிகள் நீங்கலாக இப் பரத கண்டம் நெடுகிலும் 40 ஆண்டுகட்கு முன்னர் புலியைச் சாதாரணமாகக் காணலாம். வனப்பான வண்ணம், கவர்ச்சி மிகுந்த கோடுகள், நன்கமைந்த உடல், பெரும் சக்தி வாய்ந்த அங்கங்கள் உடையது. புலி இன்றைக்கு இருந்தாலும் இறந்தாலும் பதினாயிரம் ரூபாய் பெறும். இதன் எண்ணிக்கை பெருமளவில் குறைந்துவிட்டது. இதனை வளர்ப்பதற்கென்று மத்திய அரசு 5 கோடி ரூபாய் செலவில் — Project Tiger —என்ற திட்டத்தை 1970-ஆம் ஆண்டிலிருந்து அமல்படுத்தி வருகிறது. தமிழக அரசோ, இந்தப் பிரச்சினையை 1963லேயே உணர்ந்து அன்று முதல் புலியினத்திற்கு முழுப் பாதுகாப்புக் கொடுத்து அதற்கெனவே ஒரு தனிச் சரணாலயம் திருநெல்வேலியில் உண்டாக்கியுள்ளது. 2,000 ஆண்டுகட்கு முன்பு வள்ளுவப் பெருந்தகை புலியைப் பற்றி,

''பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்''

என்ற குறள் மூலம், ''பெரிய உடலும் கூரிய கொம்புகளும் உடைய யானையும் உடல் சிறிய புலி தாக்கினால் அஞ்சும்; அலறும்'' என்று பாடியிருப்பதால் புலியினம் நமது இலக்கியப் பண்பாட்டுடன் ஒன்றியுள்ளது என்பது புலனாகிறது. புலியைக் கொடியிலே உயர்த்திப் பரணி பாடித் தரணியாண்ட தமிழ் மண்ணில் இப்புலியினம் அறவே அகன்று விடுமோ என்ற அவல நிலை உள்ளது.

இனி, கூர்ங்கோட்டது யானையைப் பற்றிப் பார்ப்போம்.

பழைய காலத்துப் பழமொழியான, யானை இருந்தாலும் ஆயிரன் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன்' என்பதை இக்காலத்திலும் முழுவதும் உண்மை என நாம் உணர வேண்டும். 'கூர்ங்கோட்டது' என்றால் கூரிய கொம்புகள். இக்கொம்புகளே பத்தாயிரம் முதல் ஐம்பதாயிரம் ரூபாய் வரை விலை மதிப்புள்ளவை. இந்தக் கூரிய கொம்புகளே இதற்குக் காலனாக வருமென்பதைச் சிந்திக்குங்கால் துயர் எழுகிறது. இந்த விலை மதிப்பற்ற கொம்புகளைத் தேடி ஒரு சாரார், யானையை கள்ளத்தனமாகக் கொன்று நாட்டுக்கு நஷ்டமேற்படுத்தி வருகிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இப்படிப்பட்ட—சங்க நூற்களில் பாடப்பட்டுள்ள—விலைமதிப்பற்ற வனவுயிர்களைக் காப்பாற்றுவதில் நாம் எல்லோரும் உறுதி பூண்டு ஆவன செய்யுமாறு அனைவரையும் வேண்டுகிறேன்.

(வனவுயிர்களையும், புள்ளினங்களையும், பேணுதல் அரசின் கடமை மட்டுமல்ல ; வனத் துறையினரின் கடமை மட்டுமல்ல; ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும். இவ்வாரத்திலும், மாதத்திலும் வனவுயிர்களைப் பற்றி நாம் சிந்தித்தும், விழாவெடுத்தும், வனவுயிர்களை அழிக்கும் காரணங்களை ஆராய்ந்தும் அவற்றைக் காக்கும் செயல்களில் ஈடுபடுவதும், மகிழ்வதும், மன நிறைவு தருகின்றன.

இயற்கையின் நல்லியல்புகளை இழக்காமல் வனங்கள் முறைமையில் பாழாகாமல் வனவுயிர்கள் துயருறாமல், வளமிக்க தமிழினம் பாலையாகாமல், இவைகளை நாம் எல்லோரும் காப்போமாக! பேணுவோமாக!)

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.